வியாபாரம் பெருக விளம்பரம் செய்க !

www.nilafrance.com

# நிலா

இருமாத இதழ்


இலவச வெளியீடு

(மூவாயிரத்து ஐநூறு பிரதிகள்)

கார்த்திகை - மார்கழி 2012 | இது கிருஷ்ணா அச்சகத்தின் ஓர் விளம்பர வெளியீடு | இல. 18












## பிரான்ஸ் அதிபரின்

# ‘நாளைய பாடசாலைகள்’

François Hollande இன் தேர்தல் வாக்குறுதிகளில் கல்வி முறைகளில் மாற்றங்கள், கல்வித்துறை எதிர்கொள்ளும் ஆசிரியர் பற்றாக்குறை, பாதுகாப்பின்மை போன்ற சிக்கல்களுக்கான தீர்வுகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. ஆட்சிக்கு வந்த சிலகாலங்களிலேயே முன்னெடுக்கப்பட்டு, நீண்ட பல விவாதங்கள், கருத்துக் கணிப்புகளின் பின்னர் அதிபர் தனது அறிக்கையை அண்மையில் வெளியிட்டிருக்கிறார். கல்வித்துறை மீதான தனது பார்வையையும் அது ஏற்படுத்த இருக்கும் மாற்றங்களையும் «நாளைய பாடசாலைகள்» என்ற தலைப்பில் பிரெஞ்சு அதிபர் அறிக்கையாக வெளியிட்டுள்ளார்.

**பாடசாலை நாட்கள் அதிகரிப்பு**

தற்போது கிழமைக்கு நான்கு நாட்களே பாடசாலை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (8 அரை நாட்கள்) இதைக் காலப்போக்கில் நாலரை நாட்களாக மாற்ற (9 அரை நாட்கள்) திட்டமிடப்பட்டிருக்கின்றது. 2013 செப்ரெம்பரிலிருந்து இது நடைமுறைக்கு வரும்.

**சரியான மதிப்பெண்கள் பெறாததால் ஒரே ஆண்டில் இரண்டு வருடங்கள் இருக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை குறைத்தல்**

15 வயதிற்கு உட்பட்டவர்களில் 37 சதவீதத்தினர் ஒருமுறையாவது சித்தியடையாமல் இரு வருடங்கள் ஒரே வகுப்பில் இருக்கிறார்கள். இதில் ஐரோப்பாவைப் பொறுத்தவரை பிரான்சே முன்னிலையில் உள்ளது. கல்வி முறையில் மாற்றங்கள் செய்யும் அமைப்பின் கருத்தின்படி, இம்முறை பயனற்றதாகவும் அதிகளவு செலவீனமானதாகவும் கருதப்படுகின்றது. இக்கருத்தில் உடன்படும் Hollande வகுப்பில் சித்தியடையாதோர் எண்ணிக்கை கணிசமாகக் குறைக்கப்படவேண்டும் எனக் குறிப்பிட்டார். இங்கு துல்லியமான திட்டங்கள் எதுவும் அவரால் முன்வைக்கப்படவில்லை.

2ம் பக்கம் பார்க்க

சங்கீதா அச்சகம்

39, Bld. de la Chapelle - 75010 PARIS (Métro : La Chapelle)

**கல்வியை இடையில் நிறுத்திக்கொள்ளும் முறைக்கெதிரான நடவடிக்கைகள்**

ஒரு வருடத்திற்கு 140000 மாணவர்கள் பட்டங்களோ, தகுதிச் சான்றிதழ்களோ இல்லாமல் பாடசாலைகளை இடைநிறுத்திக் கொள்கிறார்கள். எமது சமூகத்திற்கு இது மாபெரும் பின்னடைவு எனக் குறிப்பிட்ட Hollande இம்முறையை முற்றாக நீக்குவதற்கு Collége களிலும் Lycée களிலும் அதிகம் வருகை தராமல் இருக்கும் மாண வர்கள் மீது கூடுதல் கவனம் செலுத்தவும் சரியான முறையில் வழிப்படுத்தவும் பிராந்திய வழிகாட்டு சேவை மையம் அமைக்கப்படவுள்ளது எனக் கூறினார்

**ஆரம்பப் பாடசாலைகளுக்கு முன்னுரிமை**

ஆரம்ப பாடசாலைகளுக்கு அதிகளவு கவனம் எடுக்கப் படவுள்ளது. செப்ரெம்பர் 2013 முதல் அதிகளவு பின்தங்கிய பகுதிகளாகக் கணிக்கப்படும் இடங்களில் 3வயதுக்கு குறைந்தவர்களையும் பாடசாலை களில் சேர்ப்பதற்கான முறை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

**மதிப்பெண்கள் இடும்முறை**

பிரான்சில் எடுக்கப்பட்ட கருத்துக்கணிப்புகளின்படி அதிக அளவான பிரான்ஸ் நாட்டவர்கள் மதிப்பெண் இடும்முறையை முற்றாக நீக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இதில் கல்வித்துறையினருக்கும் கருத்து ஒற்றுமையிருப்பினும் மாணவர்களின் மதிப்பீடுகளை புள்ளிசார் அடிப்படையில் இல்லாமல் இலகுவான மற்றும் அவர்கள் முன்னேற்றத்தை மதிக்கும் வகையான முறைகளைக் கையாளலாம் என தெரிவித்துள்ளனர். François Hollande இதுபற்றிக் குறிப்பிடு கையில் மதிப்பீடுகள் மாணவர்களின் கல்விநிலையை மேம்படுத்த வேண்டுமேயன்றி மாறாக தண்டனையாக அமையக் கூடாது எனக் குறிப்பிட்டார். இதை உயர்நிலை, சாதாரண நிலை, போதுமான நிலை என மூன்று நிலை யாக வழங்கலாம் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**வீட்டுப்பாட வேலை**

வீட்டுப்பாடவேலைகளை பிள்ளைகள் வீடுகளில் செய்யாமல் பாடசாலைகளிலேயே செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது. இது கிழமைக்கு 4 1/2 நாட்கள் பாடசாலை நடைபெறும்போது அமுலுக்குக் கொண்டுவரப்பட உள்ளது.

**மதச்சார்பற்ற நிலை**

பாடசாலையில் மதச்சார்பற்ற நிலை பேணப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றது. இதில் நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்தாமல் ஒவ்வொருவரின் சுதந்திரம் பேணப்பட வேண்டும் என அரசுத் தலைவரால் மேலும் அறிவுறுத்தப்படுகின்றது.




1974 இல் நிர்மாணிக்கப்பட்ட பாரிசின் மிக உயர்ந்த கட்டடமான Tour Montparnasse அண்மையில் ஒரு கோடி உல்லாசப் பிரயாணி களின் வருகையை பதிவுசெய்து சாதனை படைத்துள்ளது. இக்கட்டடத்தின் 56வது மாடியிலிருந்து பாரிஸ் நகரை 360பாகையிலும் பார்வையிட முடியும்.



## சுற்றுச்சூழல் பாதுகாப்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த கோழி வளர்ப்புத்திட்டம்,

பிரான்சின் மேற்கு பகுதியில் Sartheல் அமைந்துள்ள Pincé எனும் இடத்தில் அதிகரித்து வரும் நாளாந்த வீட்டு உணவு எச்சங்களை குறைப்பதற்காக நகர சபை புதிய திட்டம் ஒன்றை அமுல் படுத்தியுள்ளது.

இங்கு வாழும் குடும்பத்தினருக்கு தலா 2 கோழிகளை வழங்க முன்வந்துள்ளது. கோழிகளுக்கு மீதி உணவுகளை வழங்குவதன் மூலம் உணவு மீதிகளால் குப்பைத் தொட்டிகள் நிரம்புவதை குறைக்க முடியுமென நகரசபை நம்புகிறது.

ஒரு கோழி ஒரு வருடத்திற்கு சரா சரியாக 150 கிலோ அளவு உணவை உண்ணக் கூடியது.

தன்னார்வமுள்ள குடும்பத்தினருடன் நகரசபை ஒப்பந்த அடிப்படையில் கோழிகளை வாங்கவுள்ளது. குறைந்தது இரண்டு ஆண்டுகளாவது கோழிகளை சரியான முறையில் உணவு உறைவிடம் கொடுத்து வளர்க்க வேண்டியது குடும்பத்தினரின் பொறுப்பு.

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே எமது நோக்கம் என்கிறது Pincé நகரசபை.






# பிரெஞ்சு அமைச்சர்களுக்கு சிறப்பு வகுப்பு

பொது இடங்களில் பெண்களுடன் எவ்வாறு நடந்துகொள்வது என்பது தொடர்பான சிறப்பு வகுப்பொன்று அமைச்சர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வகுப்பை பெண்ணுரிமைகளுக்கான அமைச்சகம் நடாத்துகின்றது.

பிரான்சின் ஜனாதிபதியாக வருமளவிற்கு செல்வாக்குப் பெற்ற முன்னாள் சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் DSK பெண்கள் விடயத்தில் பல சிக்கல்களை எதிர்கொள்கின்றார். வருங்காலத்தில் பிரான்சின் எந்த அமைச்சருக்கும் அந்நிலை ஏற்பட்டுவிடக் கூடாதென கருதிய ஜனாதிபதி ஹொலந், பொது இடங்களில் பெண்களோடு எப்படி பழகவேண்டும், எப்படிப்பட்ட உடல்மொழியைக் கையாள வேண்டும் என்பது தொடர்பான சிறப்பு வகுப்பொன்றை அமைச்சர்களிற்கு ஏற்படுத்தியுள்ளார். அதில் சம்பளத்தில் ஏற்றத்தாழ்வு, வீடுகளில் பெண்கள் மீதான வன்முறை குறித்தும் விளக்கம் அளிக்கப்படுகின்றது. இதுவரை 10–12 அமைச்சர்கள் இவ்வகுப்பில் கலந்துகொண்டுள்ளனர். ஏனைய அமைச்சர்களும் கலந்துகொள்வதற்கு ஆர்வமாக உள்ளனர்.

கடந்த யூலையில் வீட்டு வசதித்துறை அமைச்சர் Cécile Duflot அணிந்திருந்த உடைக்கு சட்டசபை உறுப்பினர்கள் பாராளுமன்றில் எழுப்பிய கூச்சல் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. பிரான்சில் பெண்களுக்கான உடைக்கட்டுப்பாடு 1800 களில் ஆரம்பமாகியது. ஆனாலும் தற்போது அது நடைமுறையில் இல்லை. அத்துடன் இப்போது பாலியல் கொடுமைக்கான சட்டம் இறுக்கப்பட்டுள்ளதோடு குற்றம் புரிபவருக்கு மூன்றாண்டு சிறைத்தண்டனையும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



# உணவுப்பொருட்கள் வீணடிக்கப்படுவதை தடுக்க புதிய நடவடிக்கை!

பிரான்சில் ஆண்டொன்றிற்கு தனிநபர் ஒருவர் சராசரியாக 20 முதல் 30 கிலோ வரையான உணவுப் பொருட்களை குப்பையில் போட நேரிடுகின்றது. இதனால் ஒரு குடும்பம் சராசரியாக 500 யூரோக்களை ஒரு வருடத்திற்கு வீணடிக்கிறது.
உணவுப்பொருட்கள் இவ்வாறாக தேவையற்ற முறையில் வீணாக்கப்படுவதை 2025ம் ஆண்டிற்குள் அரைமடங்காக குறைப்பதற்கு பாரிய முயற்சிகள் எடுக்கப்படவுள்ளதாக உணவுத்துறை அமைச்சின் பிரதிநிதி Guillaume Garot தெரிவித்துள்ளார்.
2013 இளவேனிற் காலம் முதல் கீழ்வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

- சுப்பர் மார்க்கட்டுகளில் ஒவ்வொரு பொருட்களாக தேவைக்கு அளவான வகையில் பொருட்களை விற்கும் திட்டம். விரைவில் இத்திட்டத்தில் Monoprix இணையவுள்ளது.
- அதிகொள்வனவு யுக்திகளில் ஒன்றான இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம் முறையில் தனது மூன்றாவது பொருளை கொள்வனவாளர் உடனடியாகப் பெற்றுக்கொள்ளாமல், பின்னர் தனக்கு தேவைப்படும் போது வந்து பெற்றுக்கொள்ளும் வசதி.
- உணவு வங்கி ஒன்றை அமைத்து தனிநபர் தனக்கு மேலதிகம் எனக் கருதும் உணவுப் பொருட்களை உணவு வங்கியிடம் வழங்கும் திட்டம் ஒன்றும் பரிசீலனையில் உள்ளது.

மேற்படி கருத்தினை பாரிசில் நடைபெறும் சர்வதேச விவசாயக் கண்காட்சியொன்றின்போது Guillaume Garot தெரிவித்துள்ளார்.



**நல்லுறவை வலுப்படுத்தும் விருப்பாக சுதந்திரதேவி சிலையை பிரான்ஸ் நாடு அமெரிக்காவுக்கு அன்பளிப்புச் செய்திருந்தது.**

1886ம் ஆண்டில் முதன்முதலாக இச்சிலை திறந்துவைக்கப்பட்டது. பிரான்சின் சிவப்பு, வெள்ளை, நீல மூவர்ணக் கொடியைத் தாங்கிய 10 இலட்சம் மக்கள் பங்குபற்றிய வேளையில் இச் சிலைத் திறப்பு விழா நடைபெற்றது.
151 அடி உயரமான செம்புச் சிலைக்கு 27 தொன் செம்பு உபயோகிக்கப்பட்டுள்ளது.
பிரெஞ்சு அரசியல்வாதியும், சட்ட விரிவுரையாளருமான லபுலாய் (Édouard René de Laboulaye) அவர்களின் வீட்டில் பிரெஞ்சு–அமெரிக்க ஜன நாயகவாதிகள் சந்திப்பின் போது சுதந்திர தேவி சிலை அமைப்பது பற்றிய எண்ணக்கருவை 1865இல் முதன்முதலாக லபுலாய் அவர்கள் வெளியிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.
இவரது பேச்சில் உந்தப்பட்டு பர்தோடி (Frédéric Auguste Bartholdi) என்ற சிற்பக் கலை ஞரால் சுதந்திரதேவி சிலை வடிவமைக்கப்பட்டது. இவர் பிரான்ஸ் அல்சாஸ் மாகாணத்தில் கொல்மார் (Colmar) என்ற இடத்தில் 2 ஏப்ரல் 1983 இல் பிறந்தவராவார்.
126 ஆண்டுகளின் பின்னர் ஒரு வருடகாலமாக சீரமைப்புப் பணிகள் முடிந்து மீண்டும் சிலை திறந்துவைக்கப்பட்டுள்ளது.
மறு சீரமைப்புப் பணிகள் 1938 இலும் 1984–1986 காலப்பகுதியிலும் இடம்பெற்றிருக்கின்றன.

# பிரான்ஸ் தமிழர் நிகழ்வுகள்

- **மயிலிட்டி மக்கள் ஒன்றியம்**

மயிலிட்டி மக்கள் ஒன்றியத்தின் ஒன்றுகூடலும் ஆண்டுப் பொதுக் கூட்டமும் 7.10.2012 அன்று பிரான்சில் நடைபெற்றது.

- **சென்.ஹென்றிஸ் ஆண்டு விழா**

சென்.ஹென்றிஸ் பழைய மாணவர் சங்கத்தின் ஆண்டுவிழா 7.10.2012 அன்று பாரிசில் நடைபெற்றது.

- **இராகசங்கமம் - 2012**

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பிரான்சின் இராகசங்கமம் - 2012, 14.10.2012 அன்று Sevran இல் நடைபெற்றது.

- **கலாலயத்தின் கலைவிழா**

கலாலயம் வழங்கிய 22வது கலை விழா 20.10.2012 அன்று Vincennes இல் நடைபெற்றது.

- **அரங்கேற்றம்**

கலாலய மாணவர்கள் டிபானி மதனராஜா, வினோத் பொன்னுத்துரை ஆகியோரின் அரங்கேற்றம் 06.10.2012 இலும் 20.10.2012 இலும் Vincennes மண்டபத்தில் நடைபெற்றது.

- **கலைவண்ணம் 2012**

பிரான்ஸ் திருமறைக் கலாமன்றத்தின் கலைவண்ணம் - 2012, 20.10.2012 அன்று Aubervilliers இல் நடைபெற்றது.

- **அதிபரின் நூல் வெளியீடு**

மகாஜனக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்களின் இரு நூல்கள் வெளியீடு 21.10.2012 அன்று Aubervilliers இல் நடைபெற்றது.

- **காரை நலன்புரிச்சங்கம்**

காரை நலன்புரிச் சங்கத்தின் வாணி விழா 21.10.2012 அன்று பாரிசில் நடைபெற்றது.

- **சங்கிலியன் விருது - 2012**

பாரிஸ் தமிழ் தேசிய குறும்பட விழா 2012, சங்கிலியன் விருதுப் போட்டி 28.10.2012 அன்று Sevran இல் நடைபெற்றது.

- **நயினைச் சுடர் - 3**

நயினை அபிவிருத்திக்கழகம் - பிரான்ஸ் நடாத்திய ஆண்டுவிழாவும் நயினைச்சுடர் -3 வெளியீடும் 01.11.2012 அன்று பாரிசில் நடைபெற்றது.

- **9 வது தென்னங்கீற்று**

பிரான்ஸ் புங்குடுதீவு மக்கள் ஒன்றியத்தின் 9வது தென்னங்கீற்று 04.11.2012 அன்று பாரிசில் நடைபெற்றது.

- **கலைக்களரி**

பிரான்ஸ் தமிழ் கலைஞர்கள் இணைந்து வழங்கிய கலைக்களரி 02.11.2012 அன்று Sevran இல் நடைபெற்றது.

- **ஆடற்கலையக விழா**

ஆடற்கலையகத்தின் 13வது ஆண்டு விழா 11.11.2012 அன்று பாரிசில் நடைபெற்றது.

- **கம்பன் விழா**

கம்பன் கழகம் பிரான்ஸ் இன் 11வது ஆண்டு கம்பன் விழா 11.11.2012 அன்று Garges les Gonesse இல் நடைபெற்றது.

- **சோதியா கலைக்கல்லூரி**

சோதியா கலைக்கல்லூரியின் 23வது ஆண்டு விழா 08.12.2012 அன்று பாரிசில் நடைபெறவுள்ளது.

- **கிறிஸ்மஸ் ஒளிவிழா - 2012**

பிரான்ஸ் - இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மிகப்பணியகம் நடாத்தும் கிறிஸ்மஸ் ஒளி விழா 23.12.2012 அன்று பாரிசில் நடைபெறவுள்ளது.

# பிரெஞ்சு அரசுக்கு எச்சரிக்கையாக அமையும் எதிர்ப்பு ஊர்வலங்கள்!

புதன் கிழமை 14 நவம்பரில், 23 ஐரோப்பிய நாடுகளின் முக்கிய நகரங்களில் பல்லாயிரக் கணக்கான மக்கள் பங்குபற்றி அரசுகளின் சிக்கன நடவடிக்கைகளுக்கு எதிரான ஊர்வலங்களை நடாத்தியுள்ளனர்.

பிரான்சில் மாத்திரம் 130 இடங்களில் தொழிற்சங்கங்கள் (CET, CFDT, FSU Solidarité) தங்கள் எதிர்ப்பு ஊர்வலங்களை (Pour l'Emploi) 'வேலை வாய்ப்பிற்காக' என்ற கோசத்துடன் ஐரோப்பிய தொழிலாளர்களுக்கு ஆதரவையும் ஒருமைப்பாட்டையும் தெரிவிப்பதற்காக ஒழுங்கு செய்து நடாத்தியுள்ளனர்.

ஏனைய ஐரோப்பிய நாடுகளில் அரசுகளின் சிக்கன நடவடிக்கைகளிற்கு எதிராக குறிப்பாக கிறீஸ், ஸ்பெயின் போன்ற நாடுகளில் அரசுக்கெதிரான ஆக்ரோசமான கோசங்களுடன் ஊர்வலங்கள் இடம்பெற்றுள்ளன. CFDT, CET தொழிற்சங்கங்கள் பிரான்சில் இணைந்து நடாத்திய ஊர்வலங்கள் ஜனாதிபதி பிரான்சுவா ஹொலந்தின் அரசுக்கு முதன்முறையான எச்சரிக்கையாக அமைகின்றது.

மக்களுடைய ஒருங்கிணைந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் 'ஐரோப்பிய அரசுத் தலைவர்களுக்கான செய்தி எனவும் சிக்கன நடவடிக்கைகளில் அவர்கள் நெடுந்துாரம் செல்ல முடியாது' எனவும் CFDT தொழிற் சங்கத்தின் செயலாளர் நாயகம் பிரான்சுவா செறெக் (François Chérèque) தெரிவித்துள்ளார்.



ஐரோப்பிய நாடுகள் ஆண்டொன்றிற்கு ஐந்தரைக்கோடி தொன் வாழைப்பழத்தை இறக்குமதி செய்கின்றன. இதில் 70 சதவீதம் லத்தீன் அமெரிக்க நாடுகளிலிருந்து பெறப்படுகின்றன.

## தெரியாவிட்டால் தெரிந்துகொள்ளுங்கள்...!

**தமிழில்**

நூறு ஆயிரம் – ஒரு இலட்சம்
100 000

நூறு இலட்சம் – 1 கோடி
100 00 000

**பிரெஞ்சு மொழியில்**

ஆயிரம் ஆயிரம் – 1 மில்லியன் ($10^6$)
1000 000

ஆயிரம் மில்லியன் – 1 மில்லியாட் ($10^9$)
1000 000 000

ஆயிரம் மில்லியாட்– 1 பில்லியன் ($10^{12}$)
1000 000 000 000 ($10^{12}$)

ஆயிரம் பில்லியன் – 1 பில்லியாட் ($10^{15}$)
1000 000 000 000 000

1000 பில்லியாட் – 1 ரில்லியன் ($10^{18}$)
1000 000 000 000 000 000

10 இலட்சம் = 1 மில்லியன்

**தர்மம் :–**

**இன்முகம் காட்டுவதே ஒரு தர்மம்**




**கடந்த மூன்றாண்டுகளில்** பிரான்சில் அடையாள அட்டைகளால் பாதிப்புக்குள்ளானவர்களின் தொகை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. 10 ஆண்டு காலப்பகுதியில் 4 இலட்சம் பேர், அடையாள அட்டை துஸ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்துள்ளனர். இவர்களுள் 8 வீதமானவர்கள் பிரெஞ்சு குடியுரிமை உள்ளவர்களாவர்.

அடையாள அட்டை மோசடியில் ஈடுபடுவோர் வேறு ஒருவரின் அடையாள அட்டையின் நகலை பிரதிசெய்து வங்கிக் கடன் எடுத்தல், சமூகக் கொடுப்பனவுகள் பெறல், வாடகைக்கு வீடு எடுத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

மோசடி செய்வோர் நிர்வாக ரீதியான ஆவணங்களான பற்றுச் சீட்டுகள், கடிதங்கள், வங்கிக் கணக்குகள் போன்றவற்றின் விபரங்களை குப்பையில் இருந்து எடுக்கின்றனர். சிலர் வங்கிக் கணக்கின் RIB இன் அசலையே கிழிக்காமல் கவனக்குறைவாக குப்பையில் போட்டுவிடுகின்றனர் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இச்சம்பவங்கள் பிரான்சின் பெரு நகரப் பகுதிகளிலும் அதன் சுற்றாடலிலுமே பெருமளவில் நடைபெறுகின்றன.

அடையாள அட்டையின் மூலப் பிரதி இல்லாமலே நகல் பிரதி ஒன்றை பெற்றுக்கொள்வதில் மோசடியாளர் புதிய சூழ்நிலை ஒன்றிற்கு தன்னை மாற்றி அமைத்துக் கொள்கின்றார். இவ்வாறான போலி அடையாள அட்டையும், சமூக பாதுகாப்பு அட்டையும் (carte vitale) பெற 2000 யூரோக்கள் வரை செலவாகின்றது. இவ் வேலை களைச் செய்து முடிப்பவர்கள் தொழில் நிபுணத்துவம் பெற்றவர்கள் போல் செயற்படுவதாக குற்றவியல் திணைக்கள அதிகாரி கிறிஸ்தோப் நோடான் (Christophe Nandin) தெரிவிக்கின்றார்.

- **2012 ஒக்டோபரில் தனது பெயரில் கட்டட அனுமதிப் பத்திரம்** (Permis de construire) **கேட்கப்பட்டுள்ளதாக** Valérie Trierweiler **பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார்.**
- **2011 இல் 25 வயதுடைய பெண் போலி அடையாள அட்டை மூலமாக திறந்த வங்கிக்கணக்கில், 140 000 யூரோக்களிற்கான காசோலைகளை மோசடி செய்துள்ளார்.**
- **2010 ஒகஸ்டில், 15 ஆண்டுகளாக தனது சகோதரரின் அடையாள அட்டையின் போலியை பாவித்துவந்த நபர் பிடிபட்டு 30 மாதகால சிறைத்தண்டனை பெற்றுள்ளார்.**

---

## பிரான்ஸ் நாட்டு TGV புகையிரதங்களை வாங்க இந்தியா முயற்சி!

இந்தியா அதிவேக ஆறு புகையிரதங்களை வாங்குவதற்கு பிரான்ஸ் அரசுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளது.
உலகில் அதிவேக புகையிரதங்கள் யப்பான், ஜேர்மனி, சீனா போன்ற நாடுகளிலும் தயாரிக்கப்படுகின்றன.
உலகில் அதிவேக புகையிரதத்தை மணிக்கு 574 கிலோமீற்றர் வேகத்தில் இயக்கி பிரான்ஸ் சோதனை ஓட்டங்களை நடாத்தியுள்ளது.
தற்போது இந்தியாவில், தலைநகர் புதுடில்லிக்கும் போபாலுக்கும் இடையிலேயே அதிவேக புகையிரதம் இயக்கப்படுகின்றது. ஆனால் அதன் வேகம் மணிக்கு 150 கிலோமீற்றராக உள்ளது. இந்திய புகையிரத வலையமைப்பில் நாளாந்தம் 18,5 மில்லியன் பயணிகள் பிரயாணம் செய்கின்றனர்.
இந்தியாவில் புகையிரதப்பாதையைக் கடந்துசெல்பவர்கள் வருடாந்தம் 15000 பேர் கொல்லப்படுகின்றனர். அங்கு புகையிரதங்கள் மோதுவதாலும் தண்டவாளத்தை விட்டு விலகுவதாலும் வருடாந்தம் சராசரியாக 300 பேர் கொல்லப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.
புகையிரதங்கள் கொள்வனவுக்கான பேச்சுவார்த்தைகள் பிரான்ஸ் நாட்டுடன் மட்டும் இல்லாமல் ஜேர்மனி, ஜப்பான் போன்ற நாடுகளுடனும் மேற்கொள்ளப் படுகின்றன.
புதிய புகையிரதங்களைக்கொள்வனவு செய்வதன் மூலம் இந்தியா தனது புகையிரத வலைப்பின்னலை நவீனமயப்படுத்த முயல்கின்றது.




## தொலைக்காட்சி வரி உயர்கின்றது!

விடுமுறையைக் கழிப்பதற்காக பிரான்சில் பலர் இரண்டாவது வீடு வைத்திருக்கின்றனர். இவ்வீடுகளில் உள்ள தொலைக்காட்சிகளிற்கு இதுவரை வீட்டு உரிமையாளர்கள் வரி செலுத்தவில்லை. 2013ம் ஆண்டில் இருந்து இவ்வீடுகளிற்கு தொலைக்காட்சி வரி அறவிடப்படும். 127€ முதலாவது வீட்டிற்கு வரி செலுத்துபவர் விடுமுறைக்கால இல்லத்திற்கு 64€ வரை வரி செலுத்தவேண்டும். அத்துடன் தொலைக்காட்சி வரியும் அதிகரிக்கப்படவுள்ளது. இதன் உயர்வு 4€ வரை இருக்கும். இவ்வாறான இரண்டு வரிமூலம் அரசுக்கு 164 மில்லியன் யூறோ (16 கோடி) கிடைக்கவிருக்கிறது. UMP கட்சியின் சட்டசபை உறுப்பினர் ஜில் கறே (Gilles Carrez) விடுமுறை வீடுகளிற்கான வரியினை ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கருத்துத் தெரிவித்துள்ளார்.


நீங்கள் எல்லோரும்
நிழலில் வாழவே
நான் தினமும்
வெய்யிலில் நிற்கிறேன்
- இப்படிக்கு மரம்

சங்கீதா அச்சகம்
லாச்சப்பல்

# துயர்பகிர்வு



அமரர்
**வீரபத்திரன் நாகேஸ்வரன்**
(கந்தர்மடம்)
தோற்றம் : 30.05.1951
மறைவு : 14.09.2012



அமரர்
**நடராசா ஜெயராசா**
தோற்றம் : 23.11.1951
மறைவு : 29.09.2012



அமரர்
**குமாரவேற்பிள்ளை பாலசுந்தரம்பிள்ளை**
(புங்குடுதீவு)
தோற்றம் : 30.11.1939
மறைவு : 05.10.2012



அமரர்
**மாணிக்கம் செல்வலெட்சுமி**
(சரவணை மேற்கு)
தோற்றம் : 04.04.1942
மறைவு : 09.10.2012



அமரர்
**தம்பிஐயா யோகராஜா**
(திருகோணமலை)
தோற்றம் : 22.12.1946
மறைவு : 12.10.2012



அமரர்
**வீரபத்திரன் நாகசவுந்தரம்**
(திருநெல்வேலி)
தோற்றம் : 14.08.1932
மறைவு : 17.10.2012



அமரர்
**கதிரவேலு பூபதியம்மா**
(ஏழாலை)
தோற்றம் : 05.05.1932
மறைவு : 14.12.2011



அமரர்
**அற்புதநாதன் ஜெகதாம்பாள்**
தோற்றம் : 11.06.1931
மறைவு : 15.11.2012



அமரர்
**ராஜசேகரம் வசந்தி**
(கொடிகாமம்)
தோற்றம் : 08.10.1961
மறைவு : 17.11.2012



அமரர்
**கந்தையா முருகேசு**
(ஏழாலை - ஊரங்குனை)
தோற்றம் : 24.10.1932
மறைவு : 18.11.2012

## நிலா குறுக்கெழுத்துப் போட்டி - 02

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | 2 | | X |
| | X | 3 | | X | | X | 4 |
| 5 | | 6 | | | | X | |
| X | X | | | 7 | | | |
| 8 | X | | | X | X | X | |
| | X | | | 9 | | 10 | |
| | | | | | 11 | | |
| | 12 | | | | 13 | | X |

**இடமிருந்து வலம்**

*1. 2012 இல் இலண்டனில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகள் (5)*
*2. நீ பாதி நான் .............. கண்ணே (2)*
*5. உறவு முறைகளில் ஒன்று (5)*
*7. ஒற்றைக்கண் உள்ளவரை இப்படிக் கூறுவர் (3)*
*10. வீதி (2)*
*11. கடன் பெற்றால் ............... குட்டி போடும் (3)*
*12. அம்மாவின் ......... கேட்டு குழந்தை உறங்கியது (4)*
*13. நீர் நிலைகள் மற்றும் ஈரப்பரப்புகளிலும் வாழும் தாவர வகை (2)*

**மேலிருந்து கீழ்**

*1. பன்மையின் எதிர்ச்சொல் (3)*
*2. ஆற்றைக் கடக்க கட்டப்படுவது (3)*
*3. பனைமரப் பூவை இப்படிச் சொல்லாம் (6)*
*4. பிறந்தகம், பிறந்த நாடு (4)*
*6. ஆரம்பம் இப்படியும் சொல்லலாம் (5)*
*8. சிவாஜி கணேசன், தேவிகா நடித்து 1964இல் வெளியான திரைப்படம் ஆண்டவன்.......(4)*
*9. கைவிரல்களில் ஒரு விரல் (3)*
*10. வழக்கில் கூறும் இதை வைத்து நீதி வழங்கப்படும் (3)*

**கீழிருந்து மேல்**

*12. கடற்கரையில் இம்மரம் அதிகம் வளரும் (2)*
*13. ...... செய்தால் பரிகாரம் செய்யவேண்டும் (3)*

*வலமிருந்து இடம்*

*3. முக்கனிகளில் ஒன்று (2)*

- ✔ *உங்கள் பதில்களை 10 ஜனவரி 2013 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்*
- ✔ *சரியான பதில்கள் எழுதியவர்களில் மூவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.*

● **அனுப்ப வேண்டிய முகவரி** ●

**NILA,** 39, Bld de la Chapelle - 75010 PARIS



## அரச ஆவணங்களில்
### தாய் தந்தையரிற்குப் பதிலாக
## பெற்றோர் என்ற சொற்பதம்!

*பிரான்சில் அரச ஆவணங்களில் தாய், தந்தை என்ற சொற்பதப் பிரயோகத்திற்குப் பதிலாக பெற்றோர் என்ற சொற்பிரயோகத்தை பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. ஓரினச் சேர்க்கையாளர்களின் திருமணத்திற்கு ஆதரவு அளித்துள்ள பிரான்ஸ் அரசு, அவர்கள் குழந்தைகளை வளர்ப்பதற்கு ஏதுவாக பெற்றோர் என்ற சொற்பதத்தை தாய், தந்தைக்கு பதிலாக ஆவணங்களில் பயன்படுத்த தீர்மானித்துள்ளது. இதற்கான சட்டவரைபு விரைவில் நாடாளுமன்றில் தாக்கல் செய்யப்படவுள்ளது.*

## ஐரோப்பாவின் அதியுயர்ந்த
# கிறிஸ்மஸ் மரம்



**35 மீற்றர்** *உயரமான கிறிஸ்மஸ்மரம் பாரிசில் (8ème) உள்ள கொங்கோட் சதுர்க்கத்தில் வைக்கப்பட்டுள்ளது. இம்மரம் பிரெஞ்சு–சுவிஸ் எல்லைப்புற நகரான (Doubs) டுப்ஸ் இலிருந்து கொண்டு வரப்படுகின்றது. பாரவண்டிமூலம் இரண்டு நாள் பயணத்தின் பின்னர் கொண்டு வரப்படும் 10 தொன் நிறையுள்ள இக்கிறிஸ்மஸ் மரம் இரண்டு பாரம்தூக்கிகளின் (Cranes) உதவியுடன் நிலை நிறுத்தப்படும். இம் மரத்தினை 6 டிசெம்பரில் இருந்து 3 ஜனவரி வரை பொதுமக்கள் பார்வையிடலாம்.*



*சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (OIT - Organisation International du Travail) அறிக்கையின் படி உலகில் 72 நாடுகளில் மாத்திரமே வேலை இழப்பீட்டு நிவாரண நிதி வழங்கப்படுகின்றது. முழு உலகத் தொழிலாளர்களில் 70 வீதமானவர்கள் வேலை இழப்பின் போது நிவாரண நிதி ஏதும் பெறுவதற்கு வாய்ப்பற்றவர்களாக உள்ளனர்.*

# சட்டவிரோத சிறுவர் பராமரிப்பு நிலையம்! தாதிக்கு இரண்டு ஆண்டு சிறை

சட்டத்திற்குப் புறம்பான வகையில் சிறார்களைப் பராமரித்து வந்த முன்னாள் தாதிக்கு 14 மாதச் சிறைத்தண்டனை வழங்கப் பட்டிருப்பதோடு 21000 யூரோ தண்டப்பணமும் அறவிடப் பட்டிருக்கிறது. ஒக்ரோபர் 17ஆம் திகதி Marseille குற்றவியல் நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

59 வயது Monique Monarcha என்ற முன்னாள் மருத்துவத் தாதியே ஏனைய இருவருடன் இணைந்து இந்தப் பகல் பராமரிப்பு நிலையத்தினை நடாத்தி வந்திருக்கிறார்.




பிறந்து ஆறு மாதம் முதல் மூன்று வயது வரையான 26 சிறார்களை வெறும் 50 சதுர மீற்றர் பரப்பளவுள்ள சிறிய வீடொன்றில் எந்தவித வசதிகளுமின்றி இந்தத் தாதி பராமரித்து வந்திருக்கிறார். இந்தச் சட்டவிரோதப் பகல்நேர பராமரிப்பு நிலையத்திற்கு பிள்ளைகளை அனுப்பும் ஒவ்வொரு குடும்பத்தினரிடமிருந்தும் நாளொன்றிற்கு 17 யூரோக்கள் அறவிடப்பட்டிருக்கிறது. கடந்த யூன் மாதம் பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இந்தச் சட்டவிரோத பகல் பராமரிப்பு நிலையம் மூடப்பட்டது.

சிறுவர் பராமரிப்பு நிலையத்திற்கு இருக்கவேண்டிய எந்தவிதமான அடிப்படை அம்சங்களையும் இந்த நிலையம் கொண்டிருக்கவில்லை. அத்துடன் முன்னாள் தாதி முறை யான அனுமதிப்பத்திரம் எதனை யும் பெற்றிருக்கவுமில்லை.

2009ஆம் ஆண்டு தொடக்கம் 2011 வரையான காலப்பகுதியில் இது போல சிறுவர்களைப் பராமரித்ததன் ஊடாக மாதாந்தம் 6000 யூரோக்களை இவர் வருமானமாக பெற்றிருப்பதாகத் தெரியவருகின்றது. இதுபோன்ற பல சம்பவங்கள் அண்மை நாட்களில் வெளிச்சத்திற்கு வந்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



# பௌதிகவியலுக்கான நோபல் பரிசு :

## கூட்டாக வென்ற பிரெஞ்சு–அமெரிக்க விஞ்ஞானிகள்

இந்த ஆண்டுக்கான பௌதிகவியலுக்குரிய நோபல் பரிசு பிரான்சு (Serge Haroche - 68வயது) மற்றும் அமெரிக்காவினைச் (David Jeffrey Wineland - 68வயது) சேர்ந்த இரண்டு விஞ்ஞானிகளுக்கு கூட்டாக வழங்கப்பட்டிருக்கிறது. ஒளி மற்றும் பருப்பொருள் தொடர்பான, குவாண்டம் (quantum) பௌதிக வியல் ஆராய்ச்சிக்காகவே இவர்களுக்கு இந்தப் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. அணுக்களின் துணைத் துகளான போட்டான் (photons) மற்றும் அயனிகளின் செயல்பாடுகளை விரிவாக அறிந்து கொள்ள இவர்களது ஆராய்ச்சி உதவும் எனவும் ஒளியால் இயங்கும் கடிகாரங்களின் திறனை, அணுக் கடிகாரங்களை விடத் துல்லியமானதாக தரம் உயர்த்தவும், தற்போதுள்ள அதிதிறன் கொண்ட சுப்பர் கணனிகளை விட மிக அதிவேகமான கணனிகளைத் தயாரிப்பதற்கு இந்த ஆராய்ச்சி உதவும் என்றும் நோபல் பரிசுக்கான தெரிவுக்குழு கூறுகிறது. இது தவிர அனைத்துத் தரப்பினராலும் எதிர்பார்க்கப்பட்ட அமைதிக்கான நோபல் பரிசினை இந்த ஆண்டு ஐரோப்பிய ஒன்றியம் தட்டிச் சென்றிருக்கிறது. பிரான்சும் அங்கத்துவ நாடாக இருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு முதன்மையான இந்தப் பரிசு வழங்கப்பட்டமை தொடர்பாக பல்வேறுபட்ட வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றுவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

### பதினொரு வருடங்களின் பின் பத்திரமாய் போய்ச்சேர்ந்த கடிதம்!

கணக்காளர் ஒருவருக்கு பிராங்கில் அனுப்பப்பட்ட காசோலை ஒன்று 11 வருடங்களின் பின் உரிய முகவரிக்கு போய்ச் சேர்ந்திருக்கின்றது. 29 செப்ரெம்பர் 2001ம் ஆண்டு அனுப்பப்பட்ட இக்கடிதம் பதினொரு வருடங்களின் பின் ஒக்ரோபர் 7, 2012ல் பத்திரமாய் சரியான இடத்தில் கிடைத்திருக்கிறது. அனுப்புனருக்கும் பெறுநருக்குமான தூரம் வெறும் 10 கிலோமீற்றர் மாத்திரமே. இச்சம்பவம் பிரான்சின் Finistère இல் நடந்துள்ளது.

GOPAL AND CO
கோபால் அன் கோ
Super Marché
ortel MOBILE
இலங்கை இந்திய மளிகைப்பொருட்கள் மற்றும் கடலுணவுவகைகள்
உடனுக்குடன் தருவிக்கப்படும் மரக்கறிவகைகள்
அனைத்தையும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்!
Distributeur Ortel Mobile
Ortel Sim, Recharge
Vente Gros, Demi Gros et Détail
72, Rue Louis Blanc - 75010 Paris
(M°: La Chapelle ou Gare du Nord)
E-mail : gandcoparis@gmail.com
Tél.: 01 46 07 11 10
Fax : 01 46 07 13 03
Mani : 06 79 84 79 63
G.K. : 06 18 17 56 99
Comptable : 06 23 10 65 04



# இங்கேயுமா?

### ஆண்களுடன் பெண்கள்

சமநிலைக்கு வர பிரான்ஸ் இன்னும் அதிக தூரம் செல்ல வேண்டிய நிலையில் உள்ளது. பொதுவாகக் கல்வி, உடல்நலம், சம சம்பளவேலை, அரசியல் போன்ற விடயங்கள் கருத்தில் எடுக்கப்பட்டு ஆண் – பெண் சமநிலை நிர்ணயம் செய்யப்படுகின்றது.
பிரான்ஸ் நாடானது கல்வி, உடல்நலம் போன்றவற்றில் முன்னணியில் உள்ளது. ஆனால் சம சம்பள வேலையில் பிரான்ஸ் 62ம் இடத்தில் தற்போது உள்ளது.
அரசியல் ரீதியான பொறுப்புகளில் பிரான்சில் பெண்களின் பங்களிப்பு மிகக் குறைவாகவே இருந்துள்ளது.
பிரான்சுவா மித்திரன் பிரான்சில் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் எடித் கிறெசன் (Edith Cression) என்ற பெண் பிரதமராக நியமிக்கப்பட்டிருந்தார். சோசலிசக் கட்சி அதிகாரத்தில் இருந்தபோது இவர் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட போதிலும் 1991–1992 காலப்பகுதியில் 11 மாதங்களே பிரதமராக இருந்துள்ளார்.
1960ம் ஆண்டில் உலகின் முதலாவது தெரிவு செய்யப்பட்ட பெண் அரசுத் தலைவரை இலங்கை தெரிவுசெய்து உலகிற்கு முன்மாதியாகத் திகழ்ந்தது. பின்னர் இந்தியா, இந்தோனேசியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மியன்மார் போன்ற பல ஆசிய நாடுகள் பெண்களை அரசுத் தலைவர்களாக தெரிவுசெய்தது.
உலக அளவில் பிரித்தானிய மாக்கிரட் தச்சரை 5வது நாடாக பிரதம மந்திரியாகத் தெரிவு செய்தது.
இந்நிலையில் பிரான்ஸ் அரசியல் ரீதியில் ஆண் – பெண் சமநிலைக்கு முன்னேற பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டியுள்ளது.

## நிலா திருக்குறள் கலண்டர்




**சங்கீதா** அச்சகத்தின் தயாரிப்பான நிலா திருக்குறள் கலண்டர் 2013 வெளிவந்துவிட்டது.
பிரான்ஸ் நாட்டில் தமிழ் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கான இடைவெளி அதிக மாகவே உணரப்படுகிறது. இதற்கு மொழி ஓர் முக்கிய தடையாக காணப்பட்டாலும் இந்த இடைவெளியைக் குறைப்பதற்கு போதியளவு அக்கறை காட்டப்படவில்லையென்றே கொள்ளப்படுகிறது.
இதைக் கருத்திற்கொண்டு, பிரெஞ்சிலும் தமிழிலுமான இக்கலண்டர் பிரான்சில் முதன்முதலாக தயாரிக்கப்பட்டிருக்கிறது. தமிழின் பெருமையையும், சிறப்பையும் விளக்க திருவள்ளுவர் முன்னிலைப் படுத்தப்பட்டிருக்கிறார். மேலும் பிரெஞ்சு அறிஞர்கள் பற்றிய தகவல்கள், பயனுள்ள பொன்மொழிகள் என்பன சேர்க்கப்பட்டுள்ளன.
இன்றைய வேகமான உலகில் வாரமே ஒரு நாளாக கழிவதால் நிலா திருக்குறள் கலண்டர், வாரக் கலண்டராக தயாரிக்கப்பட்டிருக்கிறது.

> **நாம் சொன்ன ஒரு பொய் உலகத்திற்கு தெரியவரும்போது நாம் சொன்ன அத்தனை உண்மைகளும் சந்தேகத்திற்கு இடமாகின்றன.**

## பிரான்ஸ் : வெளிநாட்டவர்களுக்கு வாக்குரிமை!




தற்போதைய ஆளும் கட்சி தனது தேர்தல் வாக்குறுதியில் குறிப்பிட்டிருந்தபடி பிரான்சில் வசிக்கும் வெளிநாட்டவர்களும் தேர்தலில் வாக்களிக்கும் வகையில் புதிய சட்டமொன்றை நிறைவேற்ற முனைப்புக்காட்டி வருகிறது. . ஒக்ரோபர் 27இல் நடந்த ஆளும் கட்சிக் கூட்டத்தில் இக்கருத்து வலியுறுத்தப்பட்டது. 2014இல் உள்ளூராட்சி தேர்தல் வரவிருப்பதால் அதற்குள் இந்த மசோதாவை நிறைவேற்ற ஆளும்தரப்பு அவசரம் காட்டுகிறது. ஆனாலும் எதிர்க்கட்சிகள் மட்டத்தில் இதற்கு பலத்த எதிர்ப்பு நிலவிவருகிறது.


தமிழ்மொழியில் தொடர்புகொள்ள: 06 50 49 23 94




**TRICO INTERNATIONAL**

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை உட்பட இலங்கையின் எப்பாகத்திற்கும்

**எவ்வித கட்டணமுமின்றி**
விநியோகிக்கப்படும்

உதாரணம்: 50Kg-100€

உங்கள் சகலவிதமான பொதிகளும் இலங்கை, இந்தியா உட்பட சகல நாடுகளுக்கும் குறைந்த செலவில் துரிதமாகவும், நம்பிக்கையாகவும் சென்றடைய இன்றே நாடுங்கள்.

உங்கள் பொதிகள்
உங்கள் வீட்டிற்கே
விநியோகிக்கப்படும்

**மேலதிக விபரங்களுக்கு:**
www.tricofrance.com
trico@orange.fr

**Trico Shipping France**
**20, rue du Pont à l'Huile**
**95500 Le Thillay**

Tél.: 01 34 38 92 65
09 66 43 25 43
06 77 28 01 70




## வலிமை மிக்க நாடுகளின் பட்டியலில்...

**நாடுகளின்** பொருளாதார, இராணுவ, மக்கள் சக்தி போன்ற காரணிகளை வைத்து பல்வேறு உலக நிறுவனங்கள் வலிமை மிக்க நாடுகளின் பட்டியல்களை வெளியிடுகின்றன. தற்போது GFP (Global Fire Power) என்ற அமைப்பு தனது ஆய்வுகளின் முடிவை வெளியிட்டுள்ளது.

இந்த நிறுவனம் தனது ஆய்விற்காக மக்கள் சக்தி, புவியியல் நிலைமை, தரை–கடல்–ஆகாய இராணுவ வலிமை, இயற்கை வளம், நிதி, தங்கம் – பணம் கையிருப்பு, போக்குவரத்து வசதி கள் போன்ற 45 விடயங்களைக் கருத்திற்கொண்டு தனது பட்டியலை வெளியிட்டுள்ளது.

வழமைபோல வலிமை மிக்க நாடுகளில் அமெரிக்கா, ரஸ்யா, சீனா என்பன முதல் மூன்று முன்னணி நாடுகளாக உள்ளன. இவர்களின் கருத்துப்படி இந்தியா நான்காவது இடத்திலும், அடுத்து இங்கிலாந்தும் 8வது இடத்தில் பிரான்சும் உள்ளன.

விமானத் தாக்குதலுக்கான வலுவில் பிரான்ஸ் 8 வது இடதத்தில் உள்ளது. இதற்கு முன்பாக அமெரிக்கா, சீனா, ரஸ்யா, இந்தியா, இஸ்ரேல், யப்பான், துருக்கி நாடுகள் உள்ளன.

இராணுவத்தினர் எண்ணிக்கையில் பிரான்ஸ் 18ம் இடத்தில் உள்ளது. முதல் மூன்று இடங்களில் சீனா, இந்தியா, அமெரிக்கா நாடுகள் உள்ளன. தரைப்படைத் தாக்குதலில் முக்கிய பங்குவகிக்கும் தாங்கிகளின் (Tanks) எண்ணிக்கையில் பிரான்ஸ் 32ம் இடத்தில் இருக்கின்றது. முதல் ஐந்து இடங்களில் ரஸ்யா, அமெரிக்கா, சீனா, வடகொரியா, இந்தியா ஆகிய நாடுகள் உள்ளன.

பாதுகாப்பிற்கான நிதி ஒதுக்கீடுகளில் பிரான்ஸ் 5வது இடத்தில் இருக்கின்றது. அமெரிக்கா முதலாவது இடத்திலும் அடுத்த இடங்களில் சீனா, இங்கிலாந்து, யப்பான் நாடுகள் உள்ளன. பாதுகாப்பிற்கு இந்தியா 3603 கோடி டொலர் ஒதுக்கி 10ம் இடத்தில் உள்ளது.
தங்கத்தையும் உலகப் பணத்தையும் பதுக்கி வைத்திருப்பதில் பிரான்ஸ் 15ம் இடத்தில் உள்ளது. முன்னிலையில் சீனா, யப்பான், ரஸ்யா, சவூதி அரேபியா, தாய்வான், பிறேசில் போன்ற நாடுகளை அடுத்து 7ம் இடத்தில் இந்தியா உள்ளது.
மக்கள் தொகையில் பிரான்ஸ் 17ம் இடத்தில் உள்ளது. சீனா, இந்தியா, அமெரிக்கா, இந்தோனேசியா, பிறேசில், பாகிஸ்தான், ரஸ்யா, ஜப்பான், மெக்சிக்கோ, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகள் முதல் பத்தில் உள்ளன.

பாரிஸ் நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும்

## டிராம்–வண்டிச் சேவை

விரிவுபடுத்தப்பட்டு வருகின்றது.



பாரிசை சுற்றி சேவையிலிருக்கும் PC பஸ் சேவை தற்போது T3 இலக்க டிராம் சேவையினால் மாற்றீடு செய்யப்படுகின்றது. ஆனால் பகுதி பகுதியாகவே வேலைகள் முடிவடையும். ஏற்கனவே T3 a சேவையிலுள்ளது. T3 b - (Porte de la Chapelle/Porte de Vincennes/Porte d'Ivry (14,5km) சேவை பயணிகளுக்காக 15.11.2012 ல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

T1 - Saint-Denis/Asnières-Gennevilliers (5,0km) 15.11.2012 லும்
T2 - - La Défense/Colombes/Bezons (4,2km)
19.11.2012 லும் மேலும் விரிவாக்கம் பெறுகின்றன.

அத்துடன் Antony-Clamart, Porte de Choisy-Orly போன்ற இரண்டு தடங்கள் திறப்பதற்கான வேலைகள், திட்டமிடல் நிலையில் உள்ளன.

T1 - Saint-Denis - Noisy-le-Sec
T2 - La Défense - Porte de Versailles
T3a - Pont du Garigliano - Porte d'Ivry
T4 - Aulnay-sous-Bois - Bondy ஆகிய தடங்கள் தற்போது சேவையில் உள்ளன.
T5 - Saint-Denis - Sarcelles
T6 - Châtillon Montrouge
- Viroflay-Rive-Droite
T7 - Villejuif - Louis Aragon
- ville d'Athis-Mons
T8 - Saint-Denis – Porte de Paris
-Villetaneuse-Université
ஆகிய தடங்களின் சேவைகள் 2015 ல் நிறைவுபெறும்.


ASI BOUCHERIE
HALAL
சுத்தமாகவும் சுகாதார முறைப்படியும் உங்கள் தேவைக்கேற்ப...
அனைத்து இறைச்சி வகைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள்
முழு ஆடாகவோ அல்லது பாதி ஆடாகவோ
நீங்கள் வாங்கும் போது
கிலோ 3,50€ மட்டுமே!


195, rue du Fbg. St Denis - 75010 PARIS - Tél.: 01 42 05 23 78
(Métro : La Chapelle ou Gare du Nord)

# ÉGLISE EVANGÉLIQUE DE SION

## சீயோன் சுவிசேஷ சபை – பாரிஸ், பிரான்ஸ்

### கிறிஸ்மஸ் ஆராதனை

**25 டிசம்பர்** பகல் 2.00 மணிக்கு

- சிறுவர் நிகழ்ச்சிகள்
- நாடகங்கள்
- இன்னிசை நிகழ்ச்சி
- இன்னும் சில கலை நிகழ்ச்சிகள்



**27 டிசம்பர்** முதல் **30 டிசம்பர்** வரை
ஒவ்வொரு நாளும் காலை 10 மணிமுதல் இரவு 10 மணிவரை
உபவாச ஜெபக்கூட்டம்

**31 டிசம்பர்** இரவு 10 மணிமுதல் அதிகாலை 5.00 மணிவரை
வருட முடிவு ஆராதனையும் வருடப்பிறப்பு ஆராதனையும் உண்டு

ஒவ்வொரு ஞாயிறும் மாலை 3.00 மணிக்கு பிரெஞ்சு ஆராதனையும்
ஒவ்வொரு ஞாயிறும் மாலை 4.00 மணிக்கு தமிழ் ஆராதனையும் உண்டு.

**இடம் :** ASSEMBLEE CHRETIENNE DU BON BERGER
215, Avenue du Président Wilson - 93120 La Plaine Saint Denis
RER 'B' - La Plaine Stade de France RER 'D' - Stade de France, St-Denis
Métro : Porte de la Chapelle இல் இருந்து பஸ் 153
- 5 வது தரிப்பிடம் Pont de Soissons, IBIS-Hôtel முன்பாக

அன்பானவர்களே. இவ் ஆராதனைகள். விசேஷகூட்டங்கள். உபவாசக்கூட்டங்கள். சபை ஆராதனைகள்.
கிறிஸ்மஸ் நிகழ்ச்சிகளில் பங்குபற்றி ஆசீர்வாதம் பெற வாருங்கள்!

தொடர்புகளுக்கு :-
06 61 16 95 30 - 06 64 93 62 37 - 06 03 79 58 02 - 06 58 33 65 13 - 06 26 93 37 91 - 01 49 98 23 20
E-mail : eesion@aol.com

France Paris N d'enregistrement 1/00084

நிலா
www.nilafrance.com




**சங்கீதா அச்சகம்**

புத்தம் புதிய டிசைன்களில்
அழைப்பிதழ்கள்,
பலகாரப்பைகள்
மற்றும்
உங்கள் சகலவிதமான
அச்சுத்தேவைகளுக்கும்
நாடுங்கள்!

39, Bd. de la Chapelle
75010 PARIS
M° : La Chapelle ou Gare du Nord
E-mail:
sangeethafrance@yahoo.com
Tél./Fax : 01 44 72 08 94




# 'பயனற்ற சட்டம்' நீக்கப்படுகிறது!

2011 இல் நிக்கொலா சார்கோசியின் அரசில் நிறைவேற்றப்பட்ட சட்டமான «Loi Ciotti» சோசலிச அரசால் 'பயனற்ற சட்டம்' எனக் கருதி செனட்டர் சபையினால் நீக்கப்பட்டுள்ளது.

«Loi Ciotti» பாடசாலைகளுக்கு அதிகம் வருகை தராமல் இருக்கும் மாணவர்களுக்கு எதிராக ஏற்படுத்தப்பட்ட சட்டமாகும்.

இது பாடசாலைகளுக்கு சமூகம் தராத, சமூகமின்மைக்கான சரியான காரணம் காட்டாத மாணவர்களின் குடும்பங்களுக்கு வழங்கும் அரச உதவித்தொகையை (Allocations familials) தற்காலிகமாக ரத்து செய்தது.

இந்தச் சட்டத்தை நிறைவேற்றி 2011 – 2012 இல் அரசு 619 குடும்பத்தினருக்கு உதவித்தொகையை ரத்து செய்தது. இருப்பினும் 142 மாணவர்கள் மட்டுமே பாடசாலைகளுக்கு திரும்பியுள்ளனர். 77 சதவீதமான மாணவர்களுக்கு எந்தவிதமான அதிர்வுகளையும் இச் சட்டம் ஏற்படுத்தவில்லை. மாணவர்களின் வரவொழுங்கின்மைக்கு பெற்றோரின் கவனக்குறைவே காரணம் எனச் சொல்லிவிட முடியாது. மாறாக பெற்றோர்களே செய்வதறியாது வேடிக்கை பார்க்கும் நிலையிலேயே உள்ளனர். ஆகவே குடும்ப உதவித் தொகையை ரத்து செய்வது எந்த விதத்திலும் நியாயமற்றது எனக் குறிப்பிட்டுள்ளார் கல்வித்துறைசார் அமைச்சரான George Pau-Langevin.

300 000 இளைஞர்கள் சிக்குண்டுள்ள இந்தப் பிரச்சினைக்கு கல்வித்துறையும், கல்விக் வட்டாரங்களுமே தீர்வுகளை முன்னெடுக்க வேண்டும். அத்துடன் பெற்றோர்களுடன் இணைந்து மாணவர்களை வழிகாட்டுவதற்கான வழி முறைகளை அரசு எடுக்கும் எனவும் François Hollande தெரிவித்துள்ளார்.

## மெத்ரோ தடம் 14

செந்–லசார் (Saint-Lazare) இலிருந்து செந்–உவன் (Saint-Ouen) வரை 14வது மெத்றோ தடம் விஸ்தரிக்கப்படவுள்ளது. 2013ம் ஆண்டில் ஆரம்பிக்கப்படும் வேலைகள் 2017ம் ஆண்டில் நிறை வடையும்.

2008ம் ஆண்டில் இருந்து இதற்கான திட்டமிடல் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்த 14வது தடத்தின் நீட்சியின் பின்னர் 13வது தடத்தில் பயணிப்பவர்களின் தொகை இரண்டு மடங்காக உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது 13வது தடத்தில் நாளாந்தம் 610 000 பேர் பயணிக்கின்றனர்.

5.80 கிலோமீற்றர் நீளமான இப்பாதை அமைப்பிற்காக 1, 2 மில்லியாட் யூரோக்கள் முதலீடு செய்யப்படுகின்றது.




850 வருடங்களைக் காணும் பாரிஸ் நொத்ர–டாம் தேவாலயம் நவீன முறையில் புனருத்தாரணம் செய்யப்படுகின்றது.

இத் தேவாலயம் 1163ம் ஆண்டில் கோதிக் (Gothique) கட்டடக் கலை யான மிகக்கூர்மையான கோபுரங்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

வருடக்
...ம் 12 டிசம்பர் 2012
...4 மார்ச் 2013 வரை
...ளது.

அன்று புதிதாக
...ழங்கப்பட்டு
...ன கொண்டாட்டம்
...ux)
...ர்ளது.

...ட்புறத்திலும்
...லும் மின்னொளி
...ட்டு இசைக் கருவிகள் முழங்க புனிதப் பயணம் ஆரம்பிக்கப்படும். ஆலயத்தின் 850 ஆண்டுகால சரித்திரம் 500 பக்க புத்தகம் ஒன்றின்மூலம் புதிய முறையில் வெளியிடப்படவுள்ளது.




# அம்மன் ஆடையகம்

'அழகிய ஜவுளிகளின் மலிவாலயம்'

நாங்கள் விலைகுறைவு என்று சொன்னால் நீங்கள் நம்பப் போவதில்லை ! / ஒருமுறை, ஒரே முறை வந்து பாருங்கள், உண்மை துலங்கும் !

**Tél.: 06.68.07.87.36**

**24, Rue de Départment, 75018 PARIS (M°: La Chapelle)**

(அம்மன் கோவிலுக்கு அருகாமையில்)




Rapid Emballages
Fourniture d'emballage et d'entretien pour l'alimentation,
la boucherie, la boulangerie et la restauration
உங்கள் வர்த்தக ஸ்தாபனங்களுக்குத் தேவையான
பிளாஸ்ரிக் பைகள், மற்றும் சிறியவகை பெட்டிகளை
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு : திரு. விமல்
e-mail :
vimalvasanthy@hotmail.fr
Tél. : 01 58 34 04 22
Port : 06 16 81 22 00 - 06 66 79 56 89 - 01 39 83 68 81
1 bis rue de Chemin vert, 93800 Epinay sur Seine


Le Bourget ல்
உங்கள் வைபவங்களுக்கான
மண்டபத் தேவைகளுக்கு
தொடர்பு கொள்ளுங்கள்
STALA EXOTIQUE
210, av. du 8 Mai 1945 - 93150 le Blanc Mesnil
Bus: 152, 350, 620, 148
Tél. : 01 48 65 05 66 - Fax : 01 48 65 46 67


ஸ்ரீ அஸ்ட லஷ்மி தேவஸ்தானம்
- Choisy-le-Roi -
பூஜை நேரம்
பகல் 12.30 மணி - மாலை 19.00 மணி
எதிர்வரும் 23 டிசம்பர் 2012 அன்று ஸ்ரீ பாலாஜிபெருமாள்
புதிதாக பிரதிஸ்டை செய்யப்பெற்று
கும்பாபிஷேகம் நடைபெறும்.
அன்றைய தினம் பரமபத வைகுந்த ஏகாதசி என்பதால்
பெருமாளுக்கு விசேஷ பூஜைகளும்,
ஆன்மீக உரைகளும் நிகழும்.
1 bis, Ledru Rollin - 94600 Choisy-le-Roi - France
06 80 61 35 38 / 06 80 61 04 69 / 09 80 75 01 90
01.48.52.98.19 web: www.sriashtalakshmi.com
E-mail : erampanathakurukkal@hotmail.fr


Le Bourget - Drancy யில்
புதிய தொடர் மாடி வீடுகள்
Le Bourget RER ல்
முந்திக்கொள்ளுங்கள் !!
Studio de 34m² à Partir de 131000
2p de 41m² à Partir de 159500
3p de 62m² à Partir de 224000
4p de 78m² à Partir de 299000
தொடர்புகளுக்கு:
சேகர்- 06 19 05 37 19
Fax - 01 44 49 55 31
DRANCY LA DOUCE
Bureau de Vente:
1 place Maurice niles, 93700 Drancy
தமிழில் தொடர்பு கொள்ளும் போது விசேட விலைக்கழிவு உண்டு


அறிவாலயம் புத்தகசாலை
புத்தகங்களின் சங்கமம்
Tél.: 01 44 72 03 34 - Fax : 01 44 72 03 35
Paris Arivaalayam
7, rue Perdonnet - 75010 Paris


Sarl Supee Coiffure
23 Rue Lucien Sportiss - 93270 Sevran
RER 'B' : Sevran - Livry
Tél: 07 51 51 58 02

# Syndicat des Copropriétaires



## தொடர்மாடி - கூட்டு உரிமையாளர் சங்கம்

ஒரு தொடர்மாடிக் கட்டடத்தில் பல கூட்டு உரிமையாளர்கள் இருப்பதால் அவர்களுக்குள் பிணக்குகள் ஏற்படுவது சகஜம். இதனைத் தவிர்ப்பதற்கும், முழுக்கட்டடத்திற்குமான பராமரிப்பு வேலைகளை ஒழுங்கு செய்து பராமரிப்பதற்கும் கூட்டு உரிமையாளர் சங்கம், வீட்டு உரிமையாளர்களாலே நடாத்தப்படுகிறது. இந்த வீட்டு உரிமையாளர்களுக்கு சில கடமைகளும், உரிமைகளும் (Droits et devoirs) இருக்கின்றன.

10 ஆடி 1965 இல் நெறிமுறைப்படுத்தப்பட்ட புதிய சட்டத்தில் தொடர்மாடிக் குடியிருப்பில் சங்கம் அமைவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டு உரிமை யாளர் சங்கத்தை பொறுப்போடு இயக்குவதற்கு சங்கத்தினால் ஒருவர் நியமிக்கப்படுவார். இவர் சின்டிக் 'Syndic' என அழைக்கப்படுவார். இவர் கூட்டு உரிமையாளருள் ஒருவராகவோ அல்லது அவரின் மனைவியாகவோ இருக்க முடியும். அவ்வாறு ஒருவர் பொறுப்பேற்க முன்வராத பட்சத்தில் இந்த தொழிற்துறை சார்ந்த வல்லுனர் ஒருவர் சங்கத்தால் நியமிக்கப்படுவார். இவ்வாறு நியமனம் செய்யப்படுபவர் ஓர் தனி ஆளாகவோ அல்லது நிறுவனம் ஒன்றின் முகவராகவோ இருப்பார். தொடர்மாடிக் கட்டிடத்தைப் பராமரிப்பதற்கான செலவீனங்களை சுமூகமாகப் பெறுவதற்கு கூட்டு உரிமையாளர் சங்கம் பெரும் பங்கு வகிக்கின்றது.

இவ்வாறான குடியிருப்புக்கள் பிரான்சில் 75 இலட்சம் வரை இருக்கின்றன. இது பிரான்சில் உள்ள குடியிருப்புக்களின் காற் பங்காகும். இந்த நிலையில் கூட்டு – உரிமையாளர் சங்கம் பிரான்ஸ் முழு வதும் நன்கு நிறுவனப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளது. அத்துடன் இந்த அமைப்புமுறை மற்றைய உலக நாடுகளிற்கு முன்னோடியாகவும் அமைந்துள்ளது. சங்கத்தின் எல்லா முடிவுகளும் கூட்டு – உரிமையாளர்களின் வாக்குகள் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது. வீடு களின் வீஸ்தீரணத்தைப் பொறுத்து உரிமையாளர்களின் வாக்குகள் எண்ணிக்கை விகிதாசார ரீதியில் மாறுபடும்.

வீட்டு உரிமையாளர்கள் சங்கத்தின் பொது விதிகளுக்கு கட்டுப்படவேண்டும். கூட்டு – உரிமையாளர்கள் தங்கள் வீடு களில் கூடுதலான சத்தம் போடு வதைத் தவிர்க்க வேண்டும். யன்னல்கள் ஒரே தோற்றத்தில் இருப்பதற்காக மரத்திலோ அல்லது PVC இலோ போடப்பட்டிருந்தால் மாற்றம் செய்யும் போது பழையது போல் மற்றைய யன்னல்களுடன் ஒத்திருக்க வேண்டும்.

- **24வது சரத்துப்படி, சாதாரண பெரும்பான்மை (Majorité Simple)**

பராமரிப்புச் செலவுகளை அங்கீகரிப்பது, காப்புறுதி ஒப்பந்தம் மற்றும் தேவையான வேலைகளைச் செய்வதற்கு போதுமானதாகும்.

- **25வது சரத்துப்படி அறுதிப் பெரும்பான்மை (Majorité Absolue)**

சின்டிக்கை (Syndic) மாற்றுவது, சங்கத்தின் கூட்டத்தை புதிதாகக் கூட்டுவது, தண்ணீர் பாவனைக்கு தனித்தனியான மானி போடுவது போன்றவற்றிற்கு அரைப்பங்கிற்கு கூடுதலான வாக்குகள் பெறுவ தோடு கூட்டு – உரிமையா ளர்களுள் மூன்றில் ஒரு பங்கினர் ஆதரவு தெரிவிக்க வேண்டும்.

- **26வது சரத்துப்படி இரட்டைப் பெரும்பான்மை (Double Majorité)**

மின்தூக்கி (லிப்ற்) அமைப்பது, பொதுவான இடமொன்றை விற்பது, கட்டட கண்காணிப்பாளரை (Concierge) இரத்துச் செய்வது, சங்க விதிகளில் மாற்றம் செய்வது போன்றவற்றிற்கு வாக்களிப்பில் 50 வீதத்திற்கும் மேலதிக ஆதரவு இருப்பதோடு மாத்திரமில்லாமல் கூட்டு – உரிமையாளர்களின் மூன்றில் இரண்டு பங்கினர் ஆதரவு தெரிவிக்கவும் வேண்டும்.

- **27வது சரத்தின்படி ஏகமனதான பெரும்பான்மை (Unanimité)**

செலவினப் பங்குகளில் மாற்றம் செய்தல், ஏற்கனவே இருந்துவரும் கருவிகள், இயந்திரங்கள் என்பவற்றை அகற்றுதல் போன்றவற்றிற்கு எல்லா கூட்டு – உரிமையா ளர்களின் ஒப்புதலும் பெறப்பட வேண்டும்.

பிரெஞ்சுக்காரர் மத்தியில் மதத்தைக் கடைப்பிடிப்பவர்களின் எண்ணிக்கை மிகக்குறைந்து வருவதாக கணிக்கப்படுகிறது. 1961 ல் மூன்றிலொரு பகுதியினர் (35வீதத்தினர்) ஞாயிறு தோறும் திருப்பலி பூசைக்குச் செல்பவர்களாக இருந்துள்ளனர். தற்போது வெறுமனே ஆறு சதவீதத்தினர் மட்டுமே செல்கின்றனர்.



பிரான்சில் 11 வீதமான மக்கள் தூக்கமின்மை காரணமாக வைத்தியரை நாடுகிறார்கள். இதில் 50 வயதுக்குட்பட்டோரே அதிகம். 9 வீதமானோர் தினசரி தூக்கமாத்திரை பாவிக்கின்றனர்



# வழிப்பறி மற்றும் வன்செயல்களினால் பாதிக்கப்பட்டால் தவறாது முறைப்பாடு செய்யுங்கள்!



## சின்னட்டிக்கதை

**தெருவில்** நடக்கும்போது என்னையறியாமலே ஒரு வேகம் என்னுள் குடிகொள்ளும். அதற்கான காரணம் இற்றைவரை எனக்கு மட்டுமே தெரிந்திருந்தது.
எனக்கு நாயைக்கண்டால் பயம்.
இப்போ கள்ளரைக் கண்டாலும் பயம். ஆனாலும் 'சாது மிரண்டால்' என்பது போல சிலவேளைகளில் எனக்கும் அசாத்திய துணிச்சல் வந்துவிடுவதுண்டு.

அப்படித்தான் ஒருநாள்.
காலை ஒன்பது மணி. நான் வேகமாக நடந்துகொண்டிருந்தேன்.
தூரத்தே பதைபதைத்தபடி ஒரு இளம் தமிழ்ப்பெண்.
வயது நாற்பது இருக்கலாம்.
'அய்யோ என்ர கான் பாக்,.. கான் பாக்' என்று அலறி யபடி ஓடிக்கொண்டிருந்தார்.
அந்தக்கோலத்தில் அந்தப் பெண்ணைப்பார்த்தால் எவருக்கும் மனசு இளகத்தான் செய்யும்.
அவருக்கு முன்பாக பதினைந்து வயது மதிக்கத்தக்க இரு ஆபிரிக்க இளைஞர்கள் ஓடிக்கொண்டி ருந்தார்கள்.

எதிரெதிராக அவர்கள் என்னை அண்மித்தார்கள், நின்று நிதானிக்க எனக்கு கணமும் அவகாசமில்லை.
நின்று நிதானித்திருந்தால் அவர்களைவிட வேகமாக அவர்களை முந்திக்கொண்டு ஓடியிருப்பேன் என்பதுதான் உண்மை.
தாவிப்பாய்ந்தேன்.
அவர்களிலொருவனின் சேர்ட் கொலர் என்கையில் அகப்பட்டது. அவன் சுழன்று எனக்கு ஒரு குத்துவிட்டான்.
எனது முகம் லேசாக உப்பிவீங்க பாதிக்கண் மறைந்துகொண்டது. அடி தந்த ஆவேசம். இனி விடே லாது.
சேர்ட் கொலரை கைவிட்டு எட்டி கான்பாக்கைப் பற்றிப்பிடித்தேன்.
அவனும் இழுத்தான். அது அறுந்து என்கைக்குள் வீழ்ந்தது. அவன் திமிறிக்கொண்டு ஓடினான்.

மூச்சிரைக்க இரைக்க அந்தப்பெண் ஓடிவந்தார். கான்பாக்கைக் கொடுத்தேன்.
'அய்யோ தம்பி கடவுள்போல வந்தியள். இதுக்க சீட்டுக்காசு, வீட்டுத்திறப்பு வேற கிடக்கு..'
'உங்களுக்கென்ன விசரே! காசுகள உப்பிடியே கொண்டு திரியிறது?'
அடி அகோரம், எல்லா வலிகளையும் முன்பின்தெரியாத அந்தப்பெண்மணி மீது கொட்டித்தீர்த்தேன். ஒரு அப்பாவி போல தலையைத் தொங்கப்போட்டபடி கேட்டுக்கொண்டிருந்தார் அவர்.

'சரி வாங்கோ, பொலிசில போய் என்றி போடுவம்.. ' என்றேன் – அந்த அவசரத்துக்குள்ளும்.

'இல்ல... அவங்கள் கான்பாக்கை தந்திட்டாங்கள் தானே!' என்று இழுத்தார் அவர்.

'என்ன, தந்தவங்களோ, என்ர மூஞ்சியப்பாருங்கோ, பாதிக்கண்ணக் காணேல்ல..' என்று திரும்பவும் பொரிய ஆரம்பித்தனான் அடக்கிக்கொண்டேன்.

'இல்ல அக்கா, கட்டாயம் போய் பொலிசில என்றி போடவேணும்'

'போட்டாப்போல அவங்கள் ஏதோ செய்யப்போறாங்களே?'

'அவங்கள் என்ன செய்யிறாங்கள் என்றதவிட, எங்கட பாதுகாப்புக்கு நாங்கள் செய்யக்கூடியதுகள செய்வம்'

நீங்கள் பொலிசிலயோ, அல்லது மேயரிட்டயோ, அல்லது நிம்மதி வாழ்வுக்கான பிரிவிலயோ (la vie tranquillité) முறைப்பாடு செய்யும் போது அவர்கள் என்ன சொல்கிறார்களென்றால்..

'ஓம், அண்மைக்காலமாக இந்த களவுப் பிரச்சினை பெரிய பிரச்சினையாக, உங்கள் ஒவ்வொரு வரினதும் அமைதியான வாழ்வுக்கு பங்கம் விளைவிக்கக்கூடியதாக வளர்ந்து வருகிறது என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். இதைக்கட்டுப்படுத்த நாங்களும் பல சவால்களுக்கு முகம்கொடுக்கவேண்டி இருக்கிறது. எங்களிடமும் போதாமைகள் இருக்கின்றன. பொதுமக்களாகிய நீங்களும் பல் வேறு மட்டத்தில் எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் பட்சத்தில்தான் நாமும் இந்தப்பிரச்சினைக்கு ஒரு சுமூகமான தீர்வினை எட்டமுடியும். ஆகக்குறைந்தது உங்களுக்கு ஒரு சம்பவம் நடந்துவிட்டால் முதலில் அவற்றை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். நடந்த இடம், நேரம் என்பவை முக்கியம். தொடர்ச்சியாக ஒரு குறிப்பிட்ட தெருவில், அல்லது பகுதியில் வரும் பதிவுகளை வைத்துத்தான் அந்த இடங்களில் நாங்கள் கூடுதல் கவனத்தைக் குவிக்கமுடியும்.. எனவே உங்கள் பதிவு முக்கியம்'....

இதை 'தம்' கட்டி நான் சொல்லிக் கொண்டிருந்தபோது, தனது கான்பாக்கினுள் எல்லாப் பொருட்களும் சரியாக இருக்கின்றனவா என உறுதி செய்துகொண்டிருந்த அந்த அக்கா, 'தம்பி, உங்கட இடத்தில ஏதாவது வேல, கீல வருமோ' என்றார்.

என்னுடைய முகம் இன்னும் ஒரு படி மேலே உப்பி வீங்கிக்கொண்டிருந்தது..

– அசோகா

## அட, நம்ம வாழைப்பூ!




வாழைப்பூவில் தயாராகும் அழகுசாதனப்பொருட்கள், முகத்தில் ஏற்படும் தோற்சுருக்கத்தை நீக்கும். உங்கள் முகம் இளமைப்பொலிவை மீண்டும் பெறும் என விளம்பரப்படுத்தப்பட்டு வெளியாகிறது.

மார்டினிக்கைச் சேர்ந்த அழகியல் நிபுணர்களால் இவை தயாரிக்கப்பட்டிருக்கின்றன.
முற்றிலும் இயற்கை முறைப்படி தயா ராகும் இவ் அழகியல் பொருட்களுக்கு Kadalys எனப் பெயரிடப்பட்டுள்ளது. Kadalys என்றால் சமஸ்கிருதத்தில் வாழைமரம் என்று பொருள்.
ஐரோப்பியர்களின் முகங்களையும் நம்மட வாழைப்பூ ஒரு கை பார்க்கத்தான் போகிறது!


## சங்கீதா அச்சகம் – லாச்சப்பல்

அழைப்பிதழ்கள், பலகாரப்பைகள், வாழ்த்துமடல்கள்,
அஞ்சலிப்பிரசுரங்கள், நினைவு மலர்கள் .....
குறித்த தவணையில், நியாயவிலையில் பெற்றுக்கொள்ளுங்கள்!

# ‘Je suis innocent’
## சர்ச்சைக்குள்ளாகும் சிற்பம்



அல்ஜீரிய நவீன பிளாஸ்டிக் சிற்பக் கலைஞரான Adel Abdessemed இன் கண்காட்சி Centre Georges Pompidou வில் நடைபெற்று வருகின்றது.

‘Je suis innocent’ நான் நிரபராதி என பெயரிடப்பட்டுள்ள இக் கண்காட்சிக்காக வார்க்கப்பட்டுள்ள சிற்பம் ஒன்று பிரான்ஸ் விளையாட்டுத்துறையினர் மத்தியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. 2006 உலக உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் இத்தாலி வீரரான ‘Materazzi’ இற்கு பிரான்ஸ் வீரர் Zinédine Zidane தலை யால் தாக்கிய காட்சியை சிற்பமாக வார்த்துள்ளார். 5 மீற்றர் உயரத்தில் வெண்கலத்தால் வார்க்கப்பட்ட இச் சிற்பம் George Pompidou முற்றத்தில் நிறுவப்பட்டுள்ளது. பிரான்ஸ் வரலாற்றின் மாபெரும் உதைபந்தாட்ட வீர ரின் எதிர்மறையான பக்கத்தை விபரிக்கும் இச் சிற்பத்தை நீக்க வேண்டுமென, உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

இச் சிற்பம் இளம் சமுதாயத்தினருக்கு பிரான்ஸ் உதைபந்தாட்டத்தின் மீதும், சாதனைகள் பல படைத்த Zinédine Zidane மீதும் எதிர்மறையான பார்வையையே உருவாக்கும் என்கிறார்கள் அவர்கள்.

ஆனால் Centre George Pompidiou நிர்வாகத்தினரோ, பிரான்ஸ் தணிக்கை முறைகளுக்கு அப்பாற்பட்ட நாடு. ஒரு கலைஞனின் உலகத்தின் மீதான பார்வை எப்பொழுதும் விஸ்தீரணமானதும், மாறுபட்டதுமாக இருக்கும்.

மற்றும் ஒரு கலைப்பிரதியின் மீதான கலைஞனின் கருத்துச் சுதந்திரத்திற்கு மதிப்பளிக்க வேண்டியது எமது கடமை. கருத்துச் சுதந்திரத்தில் எந்தவிதமான அழுத்தங்களையும் எம்மால் பிரயோகிக்க முடியாது என்கின்றனர். பாவம் சிடான்!

---




## பிரெஞ்சுக் குடியுரிமைபெற பிரெஞ்சுமொழிப் பரீட்சையில் சித்தியடையத் தேவையில்லை

**பி**ரான்சில் குடியுரிமை கோரும் ஒருவர் பிரெஞ்சுக் கலாச்சாரப் பரீட்சையில் தேறவேண்டும் என்ற கட்டாயம் சார்க்கோசி அரசின் இறுதிக் காலகட்டத்தில் சட்ட மூல மாக்கப்பட்டது. அதன்போது பல மனித உரிமை அமைப்புக்கள் இந்த சட்ட அமுலாக்காத்திற்கு எதிராக குரல் கொடுத்திருந்தன.

ஆனால், இனி அது தேவையில்லை என அறிவித்திருக்கிறார் உள்துறை அமைச்சர் மனுவல் வால்ஸ்.

பிரெஞ்சுப் பிரஜை ஒருவருக்கு பிரெஞ்சு மொழி பேசுதலும், விளங்கிக் கொள்ளுதலும் முக்கிய மானது. பதினைந்து வயதுச் சிறுவனிற்குரிய பிரெஞ்சுப் புலமை பிரெஞ்சுக் குடியுரிமை கோரும் ஒருவருக்கு அவசியமானதும் கூட. ஆனால் நான்கு பதில்களுள்ள வினாக்களிற்கு விடையளிப்பதன் மூலம் மாத்திரம் ஒருவர் பிரெஞ்சுப் பிரஜை ஆகிவிடலாம் என்பது நடைமுறை சாத்தியமற்றதும் அர்த்த மற்றதுமாகும்.

மாறாக, குடியுரிமைக்கு, நிரந்தர நீண்டகால வேலை பார்த்தல் ஒன்றே அவசியமானது. தற்போதைய சட்ட அமுலாக்கத்திலிருக்கும் குறுகிய கால பணி ஒப்பந்தங்களும், தற் காலிக வேலைகளும் கூட இதற்கு கணக்கிலெடுத்துக் கொள்ளப்படும் என்கிறார் அவர்.

2010 இல் 120,000 பேர் பிரெஞ்சுக் குடியுரிமை பெற்றுள்ளனர். ஆனால் அடுத்த இரு வருடங்களில் இது 45 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. பிரான்சில் பிறந்தவர்கள் 18 வயதிற்குப் பின் பிரெஞ்சுக் குடியு ரிமை பெற்றுக் கொள்வது அவர்களது உரிமை. அதை சட்டங்கள் தடுக்க முடியாது என்கிறார் மேலும் அவர்.

---



**உன் மனம்**
**வலிக்கும்போது சிரி**
**பிறர் மனம்**
**வலிக்கும் போது சிரிக்க வை!**
- சார்லி சப்ளின்



---



## பொது இடங்களில் சிறுநீர் கழித்தால்
## 35 யூரோ அபராதம்!

மேற்படி சட்டம் அமுல்படுத்தப்பட்டும், சட்டத்தை மீறுவோரின் தொகை குறைந்த பாடில்லை என பாரிஸ் நகரசபை கவலை தெரிவித்துள்ளது. பாரிசின் சில வீதிகளில் ‘மணம் சகிக்கமுடியவில்லை, அதை நிறுத்து’ என்ற சுவரொட்டிகள் அப்பகுதி குடியிருப்பாளர்களால் ஒட்டப்பட்டிப்பதையும் காணமுடிகிறது. பாரிசில் 400 இலவச கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டும் எது வித முன்னேற்றமும் இல்லை. ஜனவரி மாதத்திலிருந்து 627 பேருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

தேன்கூடு

பேராசிரியர் ச. சச்சிதானந்தம்

# பதிவுகள்

நீரிழிவு விழிப்புணர்வின் சின்னம்

## நீரிழிவு ' டயாபெற் ' உங்களுக்கு இருக்கிறதா ? இதைச் செய்யுங்கள் !

மணி நேரக்கணக்காய் ஒரே இடத்தில் இருக்காமல் 20 நிமிடத்திற் கொரு முறை நடப்பதால் இரத்தத்தில் ஏறியிருந்த குளுக்கோசினதும் இன்சுலினதும் அளவு குறைகிறது. நாங்கள் உட்கார்ந்திருக்கிற சமயத்தில் தசைகள் இயக்கமற்ற நிலையில் இருப்பதனால் அவை சுருங்கித்தளராமல் உடலின் சில அனுசேபஇயங்கங்கள் ஒழுங்கற்ற நிலையில் தொடர்ந்திருக்கின்றன. இதனால் சாப்பிட்ட பின்னர் இரத்தத்தில் சேர்ந்த குளுக்கோசு பயன்படுத்தப்படாமல் இருப்பதனால் இதன் அளவு இரத்தத்தில் கூடுகிறது. இதன் விளைவாக நீரி ழிவு வகை–2 ஏற்படுகிறது. மாறாக நடப்பதனால் இரத்தத்தில் குளுக்கோசின் அளவு குறைகிறது

உடல்நலத்தை மௌனமாகவும், இரகசியமாகவும் சீரழிக்கும் நீரிழிவால் உலகில் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை : 347 மில்லியன்

உலக நீரிழிவு தினம் World Diabetes Day : நவம்பர் 14

## ஐரோப்பியரில் முட்டை அதிகம் சாப்பிடுபவர்கள் பிரெஞ்சியர்!

ஐரோப்பாக் கண்டத்தில் அறுே–காணி வடிவான பிரான்ஸ் – Hexo-gone நாட்டில், முட்டையும் மீனும் உட்கொள்பவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டுகளிலும் பார்க்க அதிகரித்திருக்கிறது எனத்தெரிய வருகிறது. இங்கு ஒவ்வொரு வருடமும் 15 கோடி – Milliiards முட்டைகள் விற்பனை ஆகின்றன. அதாவது ஆண்டொன்றில் ஒருவர் 270 முட்டைகளை உட்கொள்கின்றார்.

உணவு தவிர்ந்த பிஸ்கற், கேக், ஐஸ்கிறீம், சமைக்கப்பட்ட உணவு வகை, தோசைவகை மற்றும் நூடில்ஸ் வகை உணவுப்பொருள் வடிவில் முட்டை உட்கொள்ளப்படுகின்றது.



முட்டை மஞ்சட் கருவில் கொழுப்பு அதிகம் இருப்பதனால் வெண்கருவையே விரும்பி உண்கின்றனர் என்பது ஆரோக்கியத் தகவல்.



## புட்டத்தில் தட்டுவதால் பின்விளைவுகள் ஏற்படும்

குழந்தைகளைக் கண்டிப்பதற்காகப், பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் புட்டத்தில் ஒன்றோ இரண்டோ தட்டுத் தட்டுவது அல்லது அடிப்பது வழக்கம். உடலியற் தண்டனையாகக் கொள்ளப்படும் இவ்வகைத் தண்டனை, குழந்தைகள் வளர வளர மற்றவர்களைக் கோபமாகத் தாக்குதல், மதுப்பழக்கத்திற்கு பழக்கப்படுதல், போதைவஸ்துப் பொருட்களை நாடுதல் மற்றும் மனரீதியாகப் பாதிக்கப்பட்டு நடத்தைப் பிறழ்வை ஏற்படுத்துகிறது எனவும் கனடாவில் செய்யப்பட்ட ஆய்வுகளை, Pediatrics எனும் அமெரிக்கத் தகவலேடு வெளியிட்டிருக்கிறது. மூன்று வயதில் அதிக அடிகள் வாங்கும் குழந்தை ஐந்து வயதளவில் கோபம் உள்ளதாக வளர்கிறது எனவும் அந்த ஆய்வில் அறியப்பட்டிருக்கிறது.

குழந்தைகள் தவறு செய்யும் போது, திருத்தும் நோக்கத்தில் பெற்றோர்களின் அதிகாரத்தைக் காட்டுவதற்காகக் கொடுக்கப்படும் இத்தண்டனை, பிரெஞ்சுப் பாரம்பரியங்களில் ஒன்றாக இருந்தாலும், குழந்தைகள் பாதிப்படையக்கூடாது என்பதற்காக 18 ஐரோப்பிய நாடுகள் உட்பட பலநாடுகளில் சட்டமூலம் தடைசெய்யப்பட்டிருப்பது போன்று பிரான்சிலும் தடைசெய்யப்பட வேண்டும் எனும் கோரிக்கை பல குழந்தை நலவிரும்பிகளால் வற்புறுத்தப்படுகிறது.

## தமிழின் முக்கண்களில் ஒன்று நிகண்டு

தமிழ் மொழியைக் கற்பவரும், பிறமொழியைக் கற்பவரும் சொல்லுக்குப் பொருள் கூறும் நூலின் துணை இன்றி எம்மொழியையும் எளிதில் கற்கமுடியாது. தமிழ் மொழியில் சொல்லுக்குப் பொருள் தரும் நூல்கள் இன்றுவரை ஏராளமாகத் தோற்றம் பெற்றன. அந்த வகையில் சொல்லுக்குப் பொருள் கூறுவதையே நோக்கமாகக் கொண்டு தோற்றம் பெற்ற முதல் நூலாக நிகண்டு விளங்குகிறது. . இலக்கிய இலக்கணங்களில் பயிற்சிக்கு முன்பாகவே நிகண்டு படித்தல் வேண்டும் எனும் நிலை அறிஞரிடையே இருந்ததனால் கல்வி நிலையில் நிகண்டு முதலிடம் பெற்றிருந்தது.

'இன்ன சொல்லுக்கு இன்ன பொருள்', என்றும் 'இன்ன பொருளுக்கு இன்ன சொல்' என்றும் கூறுவது நிகண்டு. யாப்பு நெறியில் சொற்பொருள் கூறும் தமிழ் நூல்கள் நிகண்டு எனும் பொதுப்பெயரால் வழங்கப் படுகின்றன. தமிழ்மொழியின் சொற்களஞ்சியங் களாக அமைந் திருப்பவை நிகண்டுகள கி.பி. 8 – 9 ஆம் நூற்றாண்டு முதல் 20 ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பரப்பில் சொற்பொருள் உணர்த்தும் கருவி நூல்களாலான நிகண்டுகள் பல புலமைமிக்க வித்துவான்களால் ஆக்கப்பட்டன. தமிழ் நிகண்டு மரபு கி.பி. எட்டாம் – ஒன்பதாம் நூற்றாண்டில் தி–வாகரர் என்பவரால் இயற்றப்பட்ட திவாகரம் முதல், இருபதாம் நூற்றாண்டில் கவிராஜ பண்டிதர் இராமசுப்பிரமணிய நாவலர் என்பவரால் படைக்கப்பட்ட தமிழ் உரிச்சொற் பனுவல் வரை தொடர்ந்து வளர்ந்து வந்திருக்கிறது.

## கிறிஸ்மஸ் தினம் எப்படி வந்தது?

கிறிஸ்மஸ் தினம் யேசு கிறிஸ்து பிறந்த தினமான டிசம்பர் – 25 ந் திகதி அநேகமான நாடுகளில் வருடந்தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. கிறிஸ்மஸ் சில நாடுக ளில் நவம்பர்– 18 இலும், வேறுசில நாடுகளில் ஜனவரி –6/ –7 இலும், இன்னும் ஒரு சில நாடுகளில் மார்ச்– 28 இலும் கடைப்பிடிக்கப்படுகிறது.

இத்தினத்தை இலங்கையில் நத்தார் தினம் என்று தமிழில் சொல்வர். ஆனால் இந்தியாவில் நத்தார் எனச் சொல்லாமல், கிறிஸ்மஸ் என்றே வழங்குகிறார்கள். ஏனென– னில் இலங்கை போர்த்துக்கேயரால் முதலில் பிடிக்கப்பட்டது. இதன்காரணமாக போர்த்துக்கேயச் சொற்கள் பல தமிழில் ஊடுருவின. அவ்வாறு தமிழில் சங்கமித்த சொற்களில் நத்தாரும் ஒன்று.

ஆனால் போர்த்துக்கேயத்தில் பிறப்பு என்பதை Natal என்பர். இந்த நத்தால் கிறிஸ்மஸ் – Christmas தினத்தையும் குறிக்கிறது. இந்த Natal இன் l, r ஆக மாற்றலாகி Natar என்று ஆனது. இன்னும் போர்த்துக்கேய மொழியின் சகஉதரமொழியான பிரெஞ்சில், பிறப்பை Naître என்று சொல்வர். இது 'நெய்த்ர்' என உச்சரிக்கப்படும். பிரெஞ்சும் போர்த்துக்கேயமும் இலத்தீனைத் தாயாகக்கொண்டவை. இலத்தீனில் Natalis என்றால் பிறப்பு என்று பொருள். இது பண்டைய பிரெஞ்சில் Nael என்றிருந்து, Noël - நொஎஅல் என இன்றைய பிரெஞ்சில் வழங்கப்படுகிறது.

Natal–நத்தால் – Natar நத்தார்




– Naître 'நெய்த்ர்'. Nael நாஎஅல்... Noêl – நொஎஅல்

இயேசுவின் பிறப்பு, வெகுசிரமத்தின் மத்தியில், மிகுநெருக்கடிகளுக்கு இடையில் பெத்லேம் நகரில் மாட்டுத் தொழுவத்தில் இடம்பெற்றது. அன்றைய தினம் சற்றொப்ப ஓர் சோக தினம் தான்! அதன– ால் தான் குறுகிய பகலும் நீடிய இரவும் கொண்ட நாட்களுடைய 21 – 25 திகதிகள் நிர்ணயிக்கப்பட்டன. கன்னி மேரி தேவனால் கருவேற்றம் செய்யப்பட்ட தினம் மார்ச் 25. 9 மாதங்கள் கழித்து வரும் டிசம்பர் – 25 தேவகுமாரன் பிறந்தார். இதுதான் Jesus Christ பிறந்த கிறிஸ்மஸ் தினம்.!

JesusChrist இருமொழிகள் சேர்ந்த சொற்கள். யேசு என்றால் இலத்தீனில் தேவகுமாரன் – கடவுளுடன் இருப்பவர் என்று அர்த்தம். இவர் யூதர். யூத மொழி யில் யேசுவுக்கு இணையான சொல் இஎம்மானுவெல். கிறிஸ்து என்றால் கிரேக்கத்தில் எண்ணெய் முழுக்கு இடப்பட்டவர் – இரட்சகர் என்று கருத்து. ●


# நிலா

நிலாவினைப்பெற்றுக்கொள்ள..

**சங்கீதா அச்சகம்**
39, Bld de la Chapelle - 75010 PARIS

**ரூபி அச்சகம்**
10, Rue Labat - 75018 PARIS

**CHANGE MAGENTA**
77, Bld. de Magenta - 75010 PARIS

**ASI BOUCHERIE**
195, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

**VANNI BOUCHERIE**
26, Rue Perdonnet - 75010 PARIS

**SACHI EDUCATION**
70, rue Philippe de Girard - 75018 PARIS

**NRS COIFFURE**
5B, Av. Alexis Varagne - 95 Villiers le Bel

**MAJAS SARL**
66, Rue Louis Blanc - 75010 Paris

**மாயவர் - மொழிபெயர்ப்பு**
57, Rue Louis Blanc - 75010 Paris

**MGR VIDEO**
5, Rue Perdonnet - 75010 Paris

**SARL VARNISHA COIFFURE**
111, rue de l'Ouest - 75014 Paris

**மாலா மளிகை**
4, Place de Salengro - Garges les Gonesse

**அறிவாலயம் புத்தகசாலை**
7, Rue Perdonnet (M°: La Chapelle)

**ஜீவனா சலூன்**
203, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

**SHAEE CASH & CARRY**
193, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

**Restaurant Paradise**
10, Av. Louis Aragon, Bobigny (M°: Bobigny)

**கிருஷ்ணா அச்சகம்**
73, Rue Doudeauville - 75018 Paris


## மகாஜனா ப.மா.ச. புதிய நிர்வாகிகள்

25.11.2012 ல் பிரான்ஸ் - ஒபேவில்லியேயில் நடைபெற்ற மகாஜனா ப. மா. சங்கத்தின் ஆண்டுப்பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

| | |
|---|---|
| தலைவர் : | திரு. எஸ். வி. கரிகரன் |
| உபதலைவர்கள் : | திரு. உ. பரராஜசேகரன் |
| | திரு. ச. நகுலேஸ்வரன் |
| இணைச்செயலாளர்: | திருமதி. ப.கருணைவேல் |
| | திரு. நா. வரதராஜா |
| பொருளாளர் : | திரு. ச. சுதர்சன் |
| நிர்வாக உறுப்பினர்கள் : | திரு. ச. துஷியந்தன் |
| | திரு. சி. இராதாகிருஷ்ணன் |
| | திருமதி. லீனா ஜெயக்குமார் |
| | திருமதி. லீலாவதி துரையப்பா |
| | திரு. பொ. நந்தகுமார் |
| | திரு. சி. நந்தகுமார் |
| | திரு. செ. இதயமூர்த்தி |
| | திரு. வி.பி. வாசுகன் |
| கணக்குப் பரிசோதகர் : | திரு. க. கனகேஸ்வரன் |


## அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்
A/L இல்லாதவர்களும் இளமாணிப் பட்டதாரி ஆக
இறுதிச் சந்தர்ப்பம்!

**பட்டப்படிப்பில் விருப்பம் உடையவர்கள் தவற விடக்கூடாத அரிய வாய்ப்பு!**

**பட்டங்கள் :**
B.A., B.Sc., B.Com., BBA., BCA., BGL...

**துறைகள் :** தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு, வணிகவியல், பொருளியல், கணினியியல், நிர்வாகவியல்,அரசியல், மொழியியல், சந்தையியல், சமூகவியல், உளவியல், சட்டவியல், பரதநாட்டியம், சங்கீதம், வயலின் வீணை

Sachchi Education (Annamalai University)
70, rue Philippe Girard - 75018 Paris Tél. : 01 46 07 16 00 / 01 60 28 39 12



# இன்ரபோல் தலைவராக பிரெஞ்சுப் பெண்

பிரான்சின் பொலிஸ் உயர் அதிகாரியான மிறெய் பலஸ்றாசி (Mireille Ballestrazzi) இன்ரபோலின் (Interpol) தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
1923ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச குற்ற விசாரணை பொலிஸ் அமைப்பில் (International Criminal Police Organisation - INTERPOL) இவரே முதலாவது பெண் தலைவராவார்.
190 நாடுகளை உறுப்பினராகக் கொண்ட இவ் அமைப்பின் தலைமையகம் பிரான்சில் உள்ள லியோ–ன் (Lyon) என்ற நகரில் இயங்கி வருகின்றது.

தற்போது பதவி ஏற்றிருக்கும் 58 வயதுப் பிரெஞ்சுப் பெண்மணி 1975ம் ஆண்டில் இருந்து இன்ரபோலில் பல்வேறு பதவி களை வகித்துள்ளார். பல முக்கிய வழக்குகளை திறம்பட கையாண்டதன் பின்னர் ஆணையர் ஆக பதவி உயர்வு பெற்று லியோன் தலைமைச் செயலகத்தில் பணியாற்றுகின்றார்.
இன்ரபோலின் பிராந்திய அலுவலகங்கள் நியூயோர்க் உட்பட ஆர்ஜன்டீனா, கமெறுன், ஐவரி கோஸ்ட், சல்வடோர், கென்யா, தாய்லாந்து, சிம்பாவே போன்ற 8 இடங்களில் இயங்குகின்றன.

## ஐந்து வருடத்திற்கு மேலாக




# விசா இல்லாதவர்களுக்கு விசா!

ஐந்து வருடங்களிற்கு மேலாக விசா இல்லாது பிரான்சில் வசித்து வருவோரின் விண்ணப்பங்கள் தனித்தனியாக ஆராய்ந்து விசா வழங்க புதிய சோசலிச அரசு முடிவெடுத்துள்ளது.

1991 இல் பிரான்சுவா மித்திரனின் சோசலிச அரசும் 1997 இல் லியனல் ஜோஸ்பனின் சோசலிச அரசும் 10 வருடங்களிற்கு கூடுதலாக வாழ்ந்த வர்களின் விண்ணப்பங்களை பரிசீலித்து முன்னர் விசா வழங்கியி ருந்தமை குறிப்பிடத்தக்கது. 1981 இல் 131 000 பேரும் 1997 இல் 80 000 பேரும் இச்சலுகையால் வாய்ப்புப்பெற்றனர். தற்போது 350 000 பேர் பிரான்சில் வதிவிட அனுமதிப்பத்திர மற்று வாழ்கின்றனர்.

- குழந்தை ஒன்று மூன்று வருடங்கள் கல்வி கற்றிருந்தால், ஐந்து வருடம் பிரான்சில் உள்ள பெற்றோர் விசா பெற வாய்ப்புள்ளது.

- கணவன் அல்லது மனைவி விசா இல்லாது 18 மாதத்திற்கு கூடுதலாக ஒன்றாக இருப்பின், வருமானத்தின் அளவைப் பொறுத்து விசா பெற வாய்ப்புள்ளது.

- 16 வயதிற்கு முன் பிரான்ஸ் வந்தவர்கள் இரண்டு வருடம் கல்வி கற்றிருந்தால் 18 வயதானாலும் விசா பெறமுடியும்!

> ● ஒரு மனிதன்
> விழாமல் வாழ்ந்தான் என்பது
> பெருமையல்ல.
> வீழ்ந்தபோதெல்லாம்
> எழுந்தான்
> என்பதே பெருமை.

# வீடுகளில் விபத்து

பிரான்சில் வருடாந்தம் 19000 விபத்துக்கள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.
செஞ்சிலுவைச் சங்கத்தை உள்ளடக்கிய பிரான்சில் உள்ள 50 சங்கங்கள் 2013ம் ஆண்டில் வீட்டு விபத்துகளை ஓர் முக்கிய பிரச்சினையாக கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளன.
நாட்டின் 'முக்கிய தேசியப் பிரச்சினையாக' (Grand cause nationale) இவ் விபத்துக்கள் கருதப்படவேண்டுமென பிரான்சின் பிரதம மந்திரிக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது.



காயங்களுக்குள்ளாதல், அதிர்ச்சியடைதல், நச்சுவாயுவைச் சுவாசித்தல், தீக்காயங்களிற்குள்ளாதல், தண்ணீரில் மூழ்கி மூச்சுத்திணறுதல் போன்ற பல்வேறுபட்ட பிரச்சனைகளை குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை எதிர்நோக்குகின்றனர். புள்ளி விபரங்களின்படி குழந்தைகளே கூடுதலாகப் பாதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
மூன்று நிமிடங்களுக்கு ஒன்று என்ற வீதத்தில் பிரான்சில் விபத்துக்கள் இடம்பெறுவதாகவும் வருடாந்தம் 11 மில்லியன் சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ●

கிருஷ்ணா அச்சகம்
தரம் - குறித்த தவணை - நியாயவிலை
☎: 01 42 51 29 92 Fax : 01 42 51 35 25
E-mail: krishnafrance@yahoo.com
73, Rue Doudeauville - 75018 PARIS (Métro : Château Rouge)


1வது
ஆண்டு நிறைவில்..
வாடிக்கையாளர், நண்பர்களுக்கு
எங்கள் மனம் நிறைந்த நன்றியினைத்
தெரிவித்துக்கொள்கிறோம்.
FRIENDS CYBER CAFE
15, Rue Labat – 75018 PARIS Métro : Marcadet Poissonniers
Déblocage
Réparation & Accessoires GSM
Cyber café
Taxiphone
Carte Téléphone
Carte de recharge
Réparation Ordinateurs
Tél.: 09.50.92.83.37
Fax : 01.42.52.07.03
E-mail: friendscybercafe@hotmail.fr